978 ஆ 978

ஆனிமீ & ஆடிமீ 1௳




திருப்புகழமிர்தம் ஆபீஸ்,
2/7, ஐயா முதலி தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

G DARAN'S ENGRA... RAS

N... 139471

...ருட சந்தா ரூ 1. தனிப்பிரதி ...

உ

ஓம் குஹாய நம:

## பொருளடக்கம்.


| | |
|---|---|
| திருப்புகழ் (விறல்மாரன் & அந்தகன்) திருச்செந்தூர் | 65 & 97 |
| பதவுரை ... ... | 66 & 98 |
| பொழிப்புரை ... ... | 67 & 100 |
| விரிவுரை ... ... | 67 & 101 |
| கருத்துரை ... ... | 73 & 106 |
| ஸ்ரீஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம் ... | 74 & 107 |
| கந்தர் திருவிளையாடல் ... ... | 77 & 111 |
| கதிர்காமம் ... ... | 84 |
| குரு சிஷ்ய லக்ஷணம் & கிருகஸ்தம் ... | 92 & 117 |
| புண்தவத்தியின் நற்போதனை & என் பிரார்த்தனை | 121 & 127 |



### விளம்பர விகிதம்.

| | பக்கம் 1-க்கு. ரூ. | பக்கம் ½-க்கு. ரூ. | பக்கம் ¼-க்கு. ரூ. |
|---|---|---|---|
| வருடம் 1-க்கு | 35 | 25 | 5 |
| மாதம் 6-க்கு | 20 | 14 | 9 |
| மாதம் 3-க்கு | 12 | 8 | 5 |
| மாதம் 1-க்கு | 5 | 3 | 2 |

### திருப்புகழமிர்தம் கிடைக்குமிடங்கள்.

Messrs:—

*R. ஜெயராமய்யர், பிரமஞ்ஞான சபை, சந்தபேட்டை தெரு, மதுரை.

தர்மகர்த்தா—ரங்கசாமி முதலியார், காங்கேய நல்லூர்.

P. V. G. முனிசாமி செட்டியார் அவர்கள், வயலூர் இராஜகோபுர திருப்பணியாளர், வடக்கு மாதுளங் கொல்லை தெரு, உறையூர்.

A. மாணிக்க முதலியார் அவர்கள், முதலியார் தெரு, திருத்தாந்தோணி, உறையூர்.

ஆதிநாராயண முதலியார் அவர்கள், பட்டு ஜவுளி வியாபாரம், திருக்கச்சி நம்பி தெரு, சின்ன காஞ்சிபுரம்.

C. S. தாமோதர முதலியார் அவர்கள், 35, ஆயலூர் முத்தையா முதலி தெரு, G. T சென்னை.

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், கீழரதவீதி, திருநெல்வேலி டவுன்.

வீ. ஈ. இ. மகாதேவ அய்யர் அவர்கள், சுவாமிசந்நிதித்தெரு, மைசூர்

ஈ. சுடலைமுத்துபிள்ளை அவர்கள், ஜவுளிக்கடை, மேலரதவீதி, மைசூர்.

R. சுப்ரமண்யம்பிள்ளை அவர்கள், ஆயுர்வேதாத்ஞாரம், ஜோதி சித்தவைத்தியசாலை, 45, பெருமாள் கீழரதவீதி, பாளையங்கோட்டை.

மானேஜர், ஜனோபகார ப்ரஸ், துறையூர், திருச்சி ஜில்லா.


உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

" திருப்புகழை ஓதுகின்ற கொற்றவன் தாள்போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம் "


| மலர். 2 Vol. 2 | ஈஸ்வர வருஷம் ஆனிமீ 1உ ஜுன்—1937 | இதழ் 3 No. 3 |
|---|---|---|


## திருப்புகழ்.

### திருச்செந்தூர்.

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து வெயில் காய
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் வசைகூற

குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயல்தீர
குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ

மறிமா னுகந்த இறையோன் மகிழ்ந்து
வழிபாடு தந்த மதியாளா
மலைமாவ சிந்த அலைவேலை யஞ்ச
வடிவே லெறிந்த அதி தீரா

அறிவா லறிந்து னிருதா ளிறைஞ்சும்
அடியா ரிடைஞ்சல் களைவோனே
அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவா யுகந்த பெருமாளே.

## பதவுரை.

மறிமான் உகந்த - மான்குட்டியைக் கருணையுடன் கரத்திலேந்தியுள்ள, இறையோன் - எப்பொருட்கும் இறைவராகிய சிவபெருமான், மகிழ்ந்து - பிரணவோபதேசம் பெறுவதற்காக மனமகிழ்ச்சியுடன், வழிபாடு தந்த - சிஷ்யபாவ மூர்த்தியாக நின்று வழிபட்ட, மதியாளா - ஞானவடிவினரே !, மலை - கிரவுஞ்ச மலையும், மாவு சிந்த - மா மரமாக நின்ற சூரபன்மனும் அழியுமாறும், அலை வேலை அஞ்ச - அலைகளையுடைய கடல் அஞ்சவும், வடிவேல் எறிந்த - கூர்மை பொருந்திய வேலாயுதத்தைப் பிரயோகம் புரிந்த, அதி தீரா - மிகவுந் தைரியத்தை யுடையவரே !, அறிவாலறிந்து - பாச அறிவும் பசு அறிவும் நீங்கிய மெய்யறிவினால் உணர்ந்து, உன் இருதாள் இறைஞ்சும் - தேவரீரது திருவடித் தாமரைகள் இரண்டையும் வணங்குகின்ற, அடியார் இடைஞ்சல் - அடியார்களது இடையூறுகளை, களைவோனே - நீக்குபவரே !, அழகான செம்பொன் மயில்மேல் - அழகியதும் செம்பொற் சாயலை யுடையதுமாகிய மயிலின்மிசை, அமர்ந்து - ஏறிக்கொண்டு, அலைவாய் உகந்த - திருச்சீரலைவாய் என்னும் புனிதக்ஷேத்திரத்தில் மகிழ்ந்து வீற்றிருக்கின்ற, பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே !, விறல் மாரன் - யாவரையும் மயக்குகின்ற சக்தியுடைய மன்மதன், மலர்வாளி சிந்த - மலர்க்கணைகளை வீசவும், வானில் - ஆகாயத்தில், மிக இந்து வெயில் காய - சந்திரன் மிகவும் குளிர்ந்த கிரணங்களைப் பொழியவும், மிதவாடை வந்து - மெல்லிய தென்றல் காற்று வந்து, தழல்போல ஒன்ற - அக்கினிபோல் நெருங்கவும், வினை மாதர் தம் தம் - வினைவசப்பட்ட மாதர்கள் தங்கள் தங்கள் மனம்போன வண்ணம், வசை கூற - வசைமொழிகளைக் கூறவும், குறவாணர் குன்றில் உறை - ஐம்புலன்களாகிய குறவர்களுடைய மலையில் வசிக்கின்ற, பேதைகொண்ட - அறியாமையையுடைய பெண்ணாகிய ஜீவான்மாவடைந்த, கொடிது ஆன துன்ப - கொடிய துன்பத்தைப் புரியும், மயல்தீர - மயக்கம் நீங்க, குளிர் மாலையின்கண் - குளிர்ச்சி பொருந்திய மாலைநேரத்தில், அணிமாலை தந்து - தேவரீரது திருமார்பிலணிந்துள்ள மாலையைத் தந்து, குறைதீரவந்து - இந்த ஜீவான்மாவினது குறை நீங்குமாறு வந்து, குறுகாயோ - அணுகமாட்டீரோ ?

18947



## பொழிப்புரை.

தாருகவனத்திருடிகளா லனுப்பப்பட்ட மான்குட்டியைக் கருணையினால் கரத்திலேந்தியுள்ள, எவ்வுயிர்க்கும் எப்பொருட்கும் இறைவராகிய சிவபெருமான், குடிலை மந்திரோபதேசம் பெறும் பொருட்டு மகிழ்ச்சியுடன் வழிபாடுசெய்த ஞான சொரூபியே ! கிரவுஞ்ச மலையும், மா மரமாகிநின்ற சூரபன்மனையும் அழியும்படியும்; அலைகளையுடைத்தான சமுத்திரம் அஞ்சவும், வடிவேலாயுதத்தை எறிந்த மிகுந்த தைரியத்தை யுடையவரே !, பதிஞானத்தால் மெய்ப்பொருளையறிந்து தேவரீரது அருணசரணாரவிந்தங்கள் இரண்டையும் வணங்குகின்ற அடியார்களது இன்னல்களை யகற்றுகின்றவரே ! அழகிய செம்பொன்னனைய மயில்மேல் அமர்ந்து திருச்சீரலைவாய் என்னுந் திருத்தலத்தில் மகிழ்ச்சியுடன் உறைகின்ற பெருமையிற் சிறந்தவரே ! (வுத்திறப்பட்டாரையும் மயக்குகிற) சக்தியையுடைய மன்மதன் ஐந்து மலர்க்கணைகளைச் சிந்தவும், ஆகாயத்தில் சந்திரன் மிகவும்குளிர்ந்த கிரணங்களைப்பொழியவும், மெல்லியதென்றற்காற்று அக்கினிபோல் வந்து வெப்பத்தைச் செய்யவும், வினைகளைப்புரியும் பெண்கள் தங்கள் தங்களுக்குத் தோன்றியவண்ணமெல்லாம் நிந்தைமொழிகளைச் சொல்லவும், ஐம்புலன்களாகிய வேடுவர்களது கன்மங்களாகிய மலைமேலுறைகின்ற ஜீவான்மாவாகிய பெண்மங்கைகொண்ட கொடிய துன்பத்தை விளைக்கின்ற மயக்கம் நீங்குமாறு, குளிர்ந்த மாலை நேரத்தில் தேவரீர் அணிந்துகொண்டுள்ள மலர்மாலையைத்தந்து இந்த ஜீவான்மாவினது குறைதீருமாறு வந்து அணுகாயோ ?

## விரிவுரை.

**விறல்மாரன் :—**

யயாதி, நகுஷன், புரூரவன், சர்யாதி முதலிய ராஜரிஷிகளையும், காசிபர், சியவனர், கௌதமர், பராசர், விசுவாமித்திரர் முதலிய பிரம்ம ரிஷிகளையும்; இந்திரன், அக்கினி, பிரமன், திருமால் முதலிய இமையவர்களையும் ; தனது மலர்க்கணைகளால் மயக்கி வாகைசூடியோன் ஆதலால் மதனனை விறல்மாரன் என்றனர்.

**ஐந்து மலர்வாளி :—**

*மன்மதன் கணைகள் ஐந்து. அவையாவன: தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என்பன. இவற்றின் பெயர் முறையே :— உன்மத்தம், மதனம், சம்மோகம், சந்தாபம், வசீகரணம் என்பனவாம். இவை செய்யும் அவத்தை :—சுப்ரயோகம், விப்ரயோகம், சோகம், மோகம், மரணம். இதன் விவரம் : சுப்ரயோகம் :—சொல்லும் நினைவும்; விப்ரயோகம் :—வெய்துயிர்த்திரங்கல் ; சோகம்:—வெதுப்புந் துய்யன தெவிட்டலும் ; மோகம்:—அழுங்கலும் மொழி பல பிதற்றலும் ; மரணம் :—அயர்ப்பும் மயக்கமுமாம்.*

**பேதைகொண்ட கொடிதான துன்பமயல் :—**

*தலைவன்மீது காதல்கொண்ட தலைவிக்கு குளிர்ந்த சந்திரனது தண்ணொளி வெப்பத்தையும், தென்றல் காற்று அனல்போன்ற வெம்மையையும் செய்யும். ஈண்டு ஜீவான்மா நாயகியாகவும், பரமான்மா நாயகனாகவும் வைத்து; பரமான்மாவாகிய நாயகன்மீது காதல் கொண்ட நாயகியாகிய ஜீவான்மா மிருந்த தாபத்தையடைந்து வருந்துகின்றது. இங்ஙனம் நாயகி நாயகபாவத்தில் எழுந்த திருப்புகழ் பல.*

" தள்ளுமத வேள் கைக் கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே "

—*திருப்புகழ்,*

தென்றலையம்பு புனைவார் குமார திமிரமுந்நீர்த்
தென்றலையம்புய மின்கோ மருக செழுமறைதேர்
தென்றலையம்பு சகபூ தரவெரி சிந்திமன்றல்
தென்றலையம்பு படுநெறி போயுயிர் தீர்கின்றதே.

*இங்ஙனம் பரமான்மாவின்மீது வேட்கைகொண்ட ஜீவான்மா அவ்வேட்கைதீர மலர்மாலையை விருப்புகிறது.*

" நீலங்கோள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே "

—*திருப்புகழ்.*



**மறிமான் . . . . . வழிபாடுதந்த மதியாளா:—**

## அறுமுகச் சிவனாரை ஐம்முகச் சிவனார் வழிபட்ட வரலாறு.

*கயிலைமலையின்கண் குமாரக்கடவுள் வீற்றிருந்த ஞான்று சிவ வழிபாட்டின்பொருட்டு வந்த அமரர்கள் அனைவரும் குகக்கடவுளை வணங்கிச்சென்றனர். அங்ஙனம் வணங்காது சென்ற பிரமனை யழைத்து பிரவணப்பொருளை வினவி, அதனையுரைக்காது விழித்த அம்புயனை அறுமுகனார் சிறைப்படுத்தி, முத்தொழிலும் புரிந்து தாமே மூவர்க்கும் முதல்வன் என்பதை மலையிடை வைத்த மணிவிளக்கென வெளிப்படுத்தினார்.*

*பின்னர் ஒருநாள் கந்தாசலத் திருக்கோயிலின்கணிருந்த கந்தக் கடவுள் தந்தையாராகிய தழல்மேனியாரைத் தெரிசிக்கச் சென்றனர். பொன்னார் மேனிப்புரிசடை யண்ணல் ' புதல்வ! இங்ஙனம் வருக" என்று எடுத்து அணைத்து உச்சி மோந்து முதுகுதைவந்து "குமார! நின் பெருமையை உலகமெவ்வாறு தெறியும்: மறைகளால் மனத்தால் வாக்கால் அளக்கவொண்ணாத மாப்பெருந்தகைமையுடைய நின்னை உள்ளபடி உணரவல்லார் யாவர் ?" என்று புகழ்ந்து அதனை விளக்குவான் உன்னி எத்திறப்பட்டோர்க்கும் குருநாதனின்றி மெய்ப் பொருளை யுணரமுடியா தென்பதையும், குருஅவசியம் இருத்தல் வேண்டுமென்பதையும் உலகிற்கு உணர்த்துமாறுந் திருவுளங்கொண்டு, புன்முறுவல்பூத்த முகத்தினராய் வரைபகவெறிந்த வள்ளலை நோக்கி,*

*அமரர்வணங்கும் குமரநாயக! அறியாமையானுதல், உரிமை குறித்தாதல் நட்பினர் மாட்டும் பிழைகள் தோன்றல் இயற்கை. அறிவின்மிக்க ஆன்றோர் அறிந்து ஒரு பிழையும் செய்கிலார். அறிவிற் குறைந்த சிறியோர் அறிந்தும், அறியாமையானும் பெரும் பிழைகளையுஞ் செய்வர். அவ்வத்திறங்களின் உண்மைகளை யறிந்த பெரியோர் அதுபற்றிச் சினந்து வைரங்கொள்ளார். ஆதலால் அம்புயனும் அறிவின்மையால் நின்னைக்கண்டு வணக்கம் புரியாது சென்றனன். அவனை விளித்து அவன் மூக்கிலும்செவிகளிலும் வாயிலும் கண்களிலும் உதிரஞ் சொரியுமாறு குட்டி, கணங்களால் அடிப்பித்து, பல நாளாகச் சிறையிலிருத்தி, எல்லார் தொழிலையும் நீயே யியற்றினை. எல்லார்க்குச்செய்யும் வணக்கமும் நினக்கே யெய்துந்தகையது; அறு*

சமயத்தார்க்கும் நீயே தலைவன்" என்று எம்பிரானார் இனிதுகூறினர். எந்தை கந்தவேள் இளநகைகொண்டு "தந்தையே! ஓமெழுத்தின் உட்பொருளை யுணராப் பிரமன் உலகங்களைச் சிருட்டி செய்யும் வல்லவனாதல் எவ்வாறு? அங்ஙனமறியாதவனுக்குச் சிருட்டித் தொழிலை யெவ்வாறு கொடுக்கலாம்?' என்றனர்.

சிவபெருமான் "மைந்த! நீ அதன் பொருளைத் தெரிக்குதி" என்ன, குன்றெறிந்த குமாரக்கடவுள் "அண்ணலே! எந்தப்பொருள்களும் உபதேசமுறையினாலன்றி உரைத்தல் தகாது. காலம் இடம் என்பன அறிந்து, முறையினாற் கழறவல்லேம்" என்றனர். அரனார் கேட்டு "செல்வக்குமர! உண்மையே உரைத்தனை; ஞானபோத உபதேசப்பொருள் கேட்டதற்கு சிறந்ததென்னும் மாசிமாதத்து மகநாள் இதோ வருகிறது; நீ எஞ்ஞான்றும் நீங்காது விருப்புடனமரும் தணிகைவெற்பை யடைகின்றும்" என்று கணங்களுடன் புறப்பட்டு ஏறார்ந்து தணிகைமாமலையைச் சார்ந்தனர். குமாரக்கடவுள் தோன்றாமை கண்டு, பிரணவப்பொருள் முதலிய உண்மையுபதேசமெல்லாம் தவத்தானும் வழிபாட்டானுமே கிடைக்கற்பாலனவென்று உலகங் கண்டு தெளிந்துய்வான் றவம்புரிய ஆரம்பித்தனர். ஞானசத்திதரக் கடவுளாரின் அத்தாணி மண்டபம் எனப்படூஉம் திருத்தணிமலைச் சாரலின் வடகீழ்ப்பாற் சென்று, தம்புரிசடை தூங்க, வேற்படை விமலனை உளநிறுவி ஓர் கணப்பொழுது தவம்புரிந்தனர். எல்லாம் வல்ல இறைவன் அங்ஙனம் ஒரு கணப்பொழுது தவமுஞற்றலானன்றே அத்தணிகைமலை கணிக வெற்புஎனப் பெயர்பெற்றதென்ப.

கண்ணுதற்கடவுள் இங்ஙனம் ஒரு கணம் தவமியற்றக் கதிர்வேலண்ணல் தோன்றலும், ஆலமுண்ட அண்ணல் எழுந்து குமரனை வணங்கி வடதிசை நோக்கி நின்று பிரணவ உபதேசம் பெறும் பொருட்டு சீடனது இலக்கணத்தை உலகிற்கு உணர்த்தும்பொருட்டு சிஷ்யபாவகமாக நின்று வந்தனை வழிபாடுசெய்து பிரணவோபதேசம் பெற்றனர்.

மதிருறுங் குமரனை யிருந்தவி சேற்றியங்
கதிர்கழல் வந்தனை யதனொடுந் தாழ்வயிற்
சதுர்பட வைகுபு தாவரும் பிரணவ
முதுபொருட் செறிவேலா மொழிதரக் கேட்டனன்.

—தணிகை புராணம்.



"நாத போற்றி யெனமுது தாதை கேட்க அநுபவ
ஞான வார்த்தை யருளிய பெருமாளே"

—(ஆலமேற்ற) திருப்புகழ்.

"நாதா குமரா நமவென் றரனார்
ஓதா வென ஓதிய தெப் பொருள்தான்"

—அநுபூதி.

தமிழ்விரக உயர்பரம சங்கரன் கும்பிடுந் தம்பிரானே.

—(ஒருவரையு) திருப்புகழ்.

மலைமாவு சிந்த . . . . . . வடிவேலெறிந்த :—

மலை :—கிரவுஞ்சமலை. அதனை எறிந்தவரலாற்றை திருப்புகழமிர்தம் முதற்பாகம் 36-ம் பக்கத்திற் காண்க.

## மா வெறிந்த வரலாறு

மாயையின் மகனாகிய சூரபன்மன் சிவமூர்த்தியின்பால் பற்பல வரம் பெற்று உளந்தருக்கி அறநெறி பிறழ்ந்து அமரர்க்கு அலக்கண் விளைத்த ஞான்று, குமாரக்கடவுள் தேவர் சிறைதீர்ப்பான் அமர் தொடங்கி அசுரர் அனைவரையும் அட்டனர். முடிவில் சூரபன்மன் போர்க்கோலங்கொண்டு ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள சேனைகளைத் திரட்டிக்கொண்டு போர்க்களமுற்றனன். அப்பெருந்தானையைக்கண்ட பூதவெள்ளங்களும் சேனாபதிகளும் வீரபாகு ஒழிந்த ஏனைய வீரர்களும் உளநடுங்கினர். தேவர்கள் அளக்கவொணா அலக்கணையடைந்தனர். குகப்பெருமானார் அப்பெருஞ் சேனைகளையெல்லாம் அழித்தனர். முருகவேளும் சூரபன்மனும் நெடுநேரம் போர் புரிந்தனர். சூரபன்மனுடைய பற்பல ஆயுதங்களும் மாயைத்திறங்களும் ஒழிந்தன. அவுணர்கோன் முடிவில் "இக்குமரனைக் கொணர்ந்து யுத்தத்தை விளைவித்த தேவர்களை முதலில் கொன்று சிறிது சினந்தணிந்தபின் இக்குமரனோடு போர் புரிவேன்" என்று நினைத்து ஓர் மாயாமந்திரத்தைச் செபித்து உலகமுழுவதும் பெரிய இருள் சூழுமாறு செய்து; அவ்விருளில் வாளையேந்தி தேவர்களைக் கொல்லுதற்பொருட்டு விண்ணிடை பாய்ந்தனன். அதனைக் குறிப்பாலுணர்ந்த அரியயனாதியமரர்கள்

தேவர்கள் தேவே யோலம் சிறந்தசிற் பரனே யோலம்
மேவலர்க் கிடியே யோலம் வேற்படை விமலா வோலம்

பாவலர்க் கெளியா யோலம் பன்னிரு புயத்தா யோலம்
மூவரு மாகி நின்ற மூர்த்தியே யோலம் யோலம்.

என்று முறையிட்டனர். அம்முறையைக் கேட்டு மூவிரு முகங் கொண்டுள்ள முழுமுதற்கடவுள், சேயமுனை நாயைப்போல் கண்ணருள் சுரந்து, தமது திருக்கரத்தில் வைகுஞ் செங்கதிர்வேலாயுதத்தை நோக்கி "நீ விரைந்துசென்று சூரபன்மனுடைய மாயைகளையும் ஆற்றலையும் அழித்து அவனது உடலைப்பிளந்து வருதி" என்று ஆணை தந்தனர். உடனே வேற்படையானது ஆயிரங்கோடி சூரியர்கள் ஒருங்குகூடினாற்போலத் திகழ்ந்து அக்கினி மழையைப் பொழிந்துகொண்டு சூரன் கொண்ட இருளுருவத்தை இமைப்பொழுதிலழித்தது.

அரியு மயனோ டபய மெனவே
அயிலை யிருள்மேல் விடுவோனே.
—(இருவர்) திருப்புகழ்.

சூரபன்மன் "முடிவில்லாத வரத்தையுடைய என்னை இவ்வேற்படை யாதுசெய்ய வல்லது? இதன் திறத்தைக் காண்கின்றனன்" என்று அண்ட முகடுகள் நடுங்கச் சிரித்து, மிகுந்த சீற்றங்கொண்டு, "சமுத்திரம், பூதலம், பிரமாதி தேவர்களது உலகங்கள் உயிர்கள் முதலிய அனைத்தையும் இப்பொழுதே யழிப்பன்" என்று விரைந்து சென்று கடல் நடுவில், நெருப்புப்போலுந் தளிர்களும், புகைபோன்ற இலைகளும், மேகக்கூட்டங்கள் போன்ற கிளைகளும், மரகத கற்கள் போன்ற பிஞ்சுகளும், மாணிக்கத்தையொத்த பழங்களுங்கொண்டு பிரமாண்டச் சுவர்வரையிலும் வேரோடி, இலக்கயோசனை தூரமளவும் விசாலித்த தலைகீழான மாமரவடிவங்கொண்டு, சகல லோகங்களையும் நடுநடுங்கமோதினன்.

வன்னியி னலங்கல் கான்று வான்றழை புகையினல்கிப்
பொன்னென விணர்க ளீன்று மரகதம் புரையக் காய்த்துச்
செந்நிற மணிகளென்னத் தீம்பழங் கொண்டு கார்போற்
றுன்னுபல் கவடுபோக்கிச் சூதயா யவண னின்றான்

அஷ்டநாகங்களும் திக்கஜங்களும் சந்திர சூரியரும் எல்லாவுயிர்களும் அஞ்சி ஓலமிட்டன. அந்த மாந்தரு சிறிது அசைந்தபொழுது எல்லா வுலகங்களும் அசைந்தன; குலகிரிகள் பொடிபட்டன; உலகத்தைத் தாங்கும் கூர்மமும் ஆதிசேடனும் புரண்டனர் நட்சத்திரங்கள் உதிர்ந்தன. அண்டங்களெல்லாந் தகர்ந்தன. நாரணனுலகும் நான்முகனுலகும் அழிந்தன. தேவர்களெல்லாம் வெருவி கயிலையைநாடி இரிந்தனர். அக்கால் அறுமுகப்பெருமான் விடுத்த அயிற்படை, ஆயிரங்கோடி யண்டத்து அக்கினியும் ஒன்று சேர்ந்தாற்போல் பேரனல்வடிவு தாங்கிச் சென்று



தேயுவி னெடுத்த வண்டத் திறங்களும் பிறங்கு ஞாலத்
தாயிரகோடி யண்டத் தங்கியு மொன்றிற றென்ன
மீயுயர்ந் தோழுகி யான்றோர் வெருவருந் தோற்றங் கொண்டு
நாயகன் றனது தெய்வப் படைக்கல நடந்த தன்றே

மூதண்ட முகடுவரை வளர்ந்தோங்கி கிளைகளையசைத்து உலகங்களை யெல்லாம் அசைத்தழிக்கின்ற மா மரத்தை இரு கூறுகப் பிளந்தது.

விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கன லுறுத்திப் பாணி
யிடம்பிடித் திட்ட தீயிற் றோய்த்துமுன் னியற்றி யன்ன
வுடம்பிடித் தெய்வ மிவ்வா றுருகெழு செலவி னேகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே.

"கவடு கோத் தெழும் உவரி மாத்திறல்
காய் வேல் பாடடன்"
—திருப்புகழ்.

## கருத்துரை.

இறைவராகிய சிவபெருமான் வழிபாடு செய்த ஞானசொருபியே! கிரவுஞ்ச மலையும் மாமரத்தையும் அழியும்படி வேலாயுதத்தை விடுத்த அதிதீரரே! அடியார்களது இன்னல்களை அகற்றுபவரே! செந்திலாண்டவனே! ஜீவான்மாவின் துன்பம் நீங்குமாறு பரமான்மாவாகிய தேவரீரது திருமார்பிலணிந்துள்ள மலர்மாலையைத்தந்து ரக்ஷித்தருள வாமாட்டீரோ?

உ

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

# ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது.)

(49-ம் பக்கத் தொடர்ச்சி)

गिरौमन्निवासे नरायेधिरुढाः
तदा पर्वते राजते तेधिरुढाः ।
इतीवब्रुवन् गन्धशैलाधिरुढः
सदेवो मुदेमे सदाषण्मुखोस्तु ॥

(6) கி3ரௌ மந்நிவாஸே நராயே தி4ரூடா:
த3தா பர்வதே ராஜதே தே3தி4 ரூடா: |
இதீவ ப்3ருவன் க3ந்த4 சைலாதி4 ரூடா:
ஸதே3வோ முதே3மே ஸதா3 ஷண்முகோ2ஸ்து ||

## அவதாரிகை.

இந்தச் சுலோகத்தில் கந்தப்பெருமான் கந்தமாதன பர்வதத்தில் வசிக்குங் காரணத்தைக் கூறுகின்றார்.

## பதவுரை.

யே நரா: - எந்த மனிதர்கள்,
மந்நிவாஸே - எனது வாஸஸ்தானமாகிய
கிரௌ - பர்வதத்தின் மீது,
அதிரூடா: - எப்போது ஏறுகின்றார்களோ,
ததா - அப்போதே,
தே - அந்த மனிதர்கள்,
ராஜதே பர்வதே - வெள்ளிமாமலையின் (கைலாயத்தில்)
அதிருடா: - ஏறிவிடுகின்றார்கள்,
இதி ப்ருவன்னிவ – இவ்வுண்மையை உணர்த்துவதற்கோ என்று நினைக்கும்படி,
கந்த சைலாதிரூட: - கந்தமாதன பர்வததின்மீது எழுந்தருளியிருப்பவரான,
ஸ: ஷண்முக: தேவ: - அந்த ஆறுமுகக்கடவுளானவர்,
மே - எனது,
முதே - சந்தோஷத்தின் பொருட்டு,
ஸதா - எப்போதும்,
அஸ்து - இருக்கக்கடவர்.



## பொழிப்புரை.

கருணைக் கடலாகிய கந்தப்பெருமானைத் தரிசிக்க அவாவுடன் வரும் அடியவர்கள் எப்போது கந்தமாதன பர்வதத்தின்மீது ஏறுவார்களோ அக்கணமே கைலாயத்தையடையும் பாக்கியம் பெறுவார்கள். இவ்வுண்மையை உணர்த்துவதற்காகவே மலையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அந்த ஆறுமுகப்பெருமான் எனக்கு எக்காலத்தும் மகிழ்ச்சியை உண்டுபண்ணட்டும்.

महां भोधितीरे महा पापचोरे
मुनीन्द्रानुकूले सुगन्धाख्यशैले ।
गुहायां वसन्तं स्व भासालसन्तं
जनार्त्तिं हरन्तं स्रयामो गुहन्तम् ॥

(7) மஹாம் போ4தி4 தீரே மஹா பாபசோரே
முனீந்த்3ரானு கூலே ஸுக3ந்தா4க்2ய சைலே |
கு3ஹாயாம் வஸந்தம் ஸ்வ பா4ஸா லஸந்தம்
ஜனார்த்திம் ஹரந்தம் ஸ்ரயாமோ கு3ஹந்தம் ||

## பதவுரை.

மஹா பாபசோரே - கொடியபாவங்களைப் போக்கடிக்கின்ற,
மஹாம் போதிதீரே - பெரிய கடற்கரையின்கண்,
முனீந்த்ரானுகூலே - முனீஸ்வரர்களுக்கு அனுகூலமான,
ஸுகாந்தாக்ய சைலே - அழகிய கந்தமாதன மலையில்மீதுள்ள,
குஹாயாம் - குகையின்கண்,
வஸந்தம் - வாசம் செய்பவரும்;
ஸ்வபாஸா - தனது திவ்விய தேஜஸ்ஸால்,
லஸந்தம் - பிரகாசிப்பவரும்,
ஜநார்த்திம் - அன்பர்களின் துக்கத்தை,
ஹரந்தம் - போக்கடிப்பவரும் ஆன,
தம் - அந்த,
குஹம் - குஹப்பெருமானை,
ஸ்ரயாம: - வழிபடுகின்றோம்.

## பொழிப்புரை.

பெரும் பாவங்களையும் போக்கடிக்கவல்ல புண்ணிய சமுத்திரக் கரையில் முனிவர்களுக்கு மகிழ்ச்சியைத் தாாநின்ற கந்தமாதன பர்வதத்தின் குகையில் எழுந்தருளியிருப்பவரும், திவ்விய தேஜோ

மூர்த்தியும் அன்பர்களின் துன்பத்தை நீர்ப்பவருமான குஹக்கடவுளை நாங்கள் சரணமாக அடைகின்றோம்.

लसत्स्वर्णगेहे नृणां कामदोहे
सुमस्तोमसंछन्न माणिक्यमञ्चे ।
समुद्यत् सहस्रार्क तुल्य प्रकाशं
सदा भावये कार्तिकेयं सुरेशम् ॥

(8) லஸத் ஸ்வர்ண கே[3]ஹே ந்ருணாம்[3] கா[4]ம தோ[3]ஹே
ஸுமஸ் தோம ஸஞ்[2]சந்ந மாணிக்ய மஞ்சே ।
ஸமு[3]த்யத் ஸஹஸ்ரார்க துல்ய ப்ரகாசம்
ஸ[3]தா பாவயே கார்த்தி கேயம் ஸுரேசம் ॥

## பதவுரை.

லஸத் ஸ்வவர்ணகேஹே - பிரகாசிக்கின்ற பொன்மயமான திருக்கோயிலின்கண்,
ந்ருணாம் காமதோஹே - அடியவர்களின் அவாவை நிறைவேற்றுவதும்,
ஸுமஸ்த்தோம ஸஞ்சந்ந மாணிக்ய மஞ்சே - புஷ்பங்களால் அழகு செய்யப்பட்ட மஞ்சத்தின்மீது,
ஸமுத்யத் ஸஹஸ்ரார்க்க துல்யப்ரகாசம் - ஏக காலத்தில் ஆயிரக்கணக்கான சூரியர்கள் உதித்தால் எத்தகைய பிரகாசம் உண்டாகுமோ அத்தகைய பிரகாசமுடையவரும்,
ஸுரேஸம் - தேவர்களுக்கெல்லாந் தலைவருமாகிய,
கார்த்திகேயம் - கார்த்திகேயப்பெருமானை,
ஸதா பாவயே - எப்போதும் எண்ணுகின்றேன்.

## பொழிப்புரை.

பொன்மயமான திருக்கோயிலின்கண் அடியவர்களின் ஆசையைப் பூர்த்திசெய்வதும், அழகிய புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான மாணிக்க மஞ்சத்தின்மீது ஒரே காலத்தில் ஆயிரக்கணக்கான சூரியர்கள் உதயமானாற்போலப் பிரகாசிக்கின்றவரும், தேவர்களுக்கெல்லாம் தலைவருமான கார்த்திகேய ஸ்வாமியை நான் எப்போதும் தியானஞ் செய்கின்றேன்.

---

(தொடரும்.)

உ

ஓம் குஹாய நம:

# கந்தர் திருவிளையாடல்

(53-வது பக்கத் தொடர்ச்சி.)

இந்திரன் முதலிய இமையவர் பின்தொடர்ந்துவர நான்முகக் கடவுள் நலம்பலமல்கிய வைகுந்தமடைந்து ஆலயத்திற்குள் சென்று சங்கு சக்கிரபாணியாகிய துவாரபாலகன்பால் விடைபெற்று, பன்னகாசனன் வைகும் பேரவையடைந்து, நாராயணமூர்த்தியின் நற்றாட் கமலங்களை வணங்கி நின்றனன். கருமுகிலனைய மேனித் திருமகள் கொழுநன் கருணைசெய்து பிரமனுக்குப் பீடமளித்து, "நான்முக! நின் படைப்புத்தொழில் இடையூறின்றி இனிது நடைபெறுகிறதா?" என்று வினவ, நான்முகன் "எந்தாய்! அறிவிற் சிறந்த அருந்தவர்களாகிய சனகாதி நால்வர்கள் என் மனத்தினின்றுந் தோன்றினார்கள். அவர்களை யான் நோக்கி "மைந்தர்களே! இந்த சிருஷ்டித்தொழிலையாற்றி இங்ஙனே இருத்திர்" என்ன, அவர்கள் அது கேட்டு நகைத்து, "ஐயா! பாசமாகிய சிறைப்பட்டு படைத்தற்றொழிலை யாம் புரியோம். ஈசனாரது இணையடியை யேத்தி இன்புறுவோம்" என்று கூறி நீங்கி, பெருந்தவத்தைச் செய்தனர். அத்தவத்திற்கு இரங்கி ஆலமுண்ட அண்ணலார் தோன்றி "நும் விருப்பம் யாதென" முனிவர் "ஆதிநாயக! வேத வுண்மையை விளம்புதி" என்றனர். இறைவன் வெள்ளியங்குன்றில் தென்திசையில் ஓர் ஆலவிருட்சத்தின்கீழமர்ந்து நால்வர்க்கும் நான்மறைப்பொருள்களை நவின்று நீங்கினர். அதனால் சனகாதி நால்வர்க்கும் மனம் ஒருமை யடையாமையால் வருந்தி மீளவும் கண்ணுதலை வேண்டிக் கடுந்தவமாற்றினர். பின்னர் அவர்கள் கயிலையை யணுகி எம்பிரானை வணங்கி "மனமடங்குமாறு உபதேசித்தருளல் வேண்டுமென" அவர்களது பரிபக்குவத்தை உணர்ந்து பிறைசூடிய பெருமான் ஆகமத்தினுட்கருத்துக்களாகிய சரியை கிரியை யோகமென்னும் முத்திறத்தையும் உபதேசித்து ஞானபாதத்தை விளக்குமாறு சின்முத்திரையைக் காட்டி மௌனநிலையையுணர்த்தித் தானும் மௌனத்துடன் வீற்றிருப்பா

ராயினர். அதுகண்ட அருந்தவரும் செயலற்று சிவயோகத்தில் அமர்ந்தனர். சிவபெருமான் ஒரு கணம் யோகத்தில் அமர்ந்துள்ள காலம் நமக்கும் ஏனையோர்க்கும் பற்பல யுகங்களாயின; உயிர்கள் இச்சையின்றி ஆண்பெண் சேர்க்கையின்றி வருந்துகின்றன; அதனால் அடியேனுடைய படைப்புத்தொழில் அழிந்தது. இது நிற்க, சிவமூர்த்தியின்பால் பற்பல வரம்பெற்றுத் தருக்கிய சூராதியவுணர்கள் எமக்குத் தினந்தோறும் ஏவலைத்தந்து பொன்னுலகத்திலும் துன்பத்தை விளைவித்தனர். இந்திரன் மகனையும் ஏனையதேவர்களையும் தேவமாதர்களையும் சிறையிட்டுத் துன்புறுத்துகின்றனர். சூரபன்மன் தேவர்களை ஏவல்கொண்டு ஒப்பாரு மிக்காருமின்றி அண்டங்கள் ஆயிரத்தெட்டையும் அரசாளுகின்றனன். இவைகளையெல்லாம் அறிந்தும் அறியாதவர்போல் அரனார் சிவயோகத்தில் அமர்ந்துளார். இனி செயத்தக்கது யாது? அதனை விரைந்து விளம்புதல் வேண்டும்" என விளம்பினன். இவைகளைக்கேட்ட திருமகள் நாயகராம் நாராயணர் கூறுவார்.

"கமலாசன! எல்லா உயிர்களுக்கும் உயிர்க்குயிராய் அருவமும் உருவமும் உருவாருவமும் ஆகிய எல்லா உயிர்கட்கும் எல்லாவுலகங்கட்கும் மூலகாரணமாய் நின்ற மூவர் முதல்வனும் முக்கட்பெருமான் மோனநிலையைக்காட்டி நிற்பாரேல் உலகில் எவர்கள்தான் இச்சையுற்று மாதர் தோளைத்தழுவுவர்?

ஆவிக ளனைத்து மாகி யருவமா யுருவ மாகி
மூவகை யியற்கைத் தான மூலகாரண மதாகுந்
தேவர்கள் தேவன் யோகின் செயன்முறை காட்டு மென்னில்
ஏவர்கள் காமங் கன்றித் தொன்மைபோ லிருக்கு நீரார்.

சிவமூர்த்தியின்பால் பற்பல நலன்களைப் பெற்ற தக்கன் ஊழ்வினை வயப்பட்டு செய்நன்றி மறந்து சிவமூர்த்தியை நிந்தித்து ஒரு பெரும் வேள்வியைச் செய்ய, அச்சிவாபராதியாகிய தக்கன்பால் சேர்ந்து இருந்ததால் நமக்கு ஏற்பட்ட தீவினையைத்தீர்த்து இன்பத்தை நல்குதற்பொருட்டு எம்பிரானார் திருவுளங்கொண்டார். சூரபன்மனுக்கு அளவில்லாத ஆற்றலை நல்கியதும், அமரர்கள் அணுகுதற்கரிய நிலையில் சனகாதிகளுக்கு சிவயோகநிலையைக்காட்டி கொன்றை சூடிய குன்றவில்லி உயிர்களுக்கு இன்னலை விளைவித்ததும் என்னென்று ஆராய்ந்து நோக்கின், பேரருள் பெருக்கேயன்றி பிறிதொரு



செயலுமுண்டோ? முக்கட்பெருமான் முனிவருக்கு உணர்வுகாட்டும் மோனத்தினின்றும் நீங்கி இமவரை யீன்ற எம்பெருமாட்டியை மணந்துகொள்ளுமேல் படைத்தற்றொழில் இனிது நடைபெறும். உமாமகேஸ்வரர்பால் இனி ஓர் குமாரன் தோன்றுமேல் சூர்முதல் அவுணரையழித்து இன்பமுண்டாக்கும். உலகமெல்லாம் தொன்மைபோல் நன்மைபெற்றுய்யும் இவைகளெல்லாம் இனிது நிகழுமாறு ஓர் உபாயத்தை யுரைப்பன். அம்புய! உலகத்தில் எத்திறப்பட்டோரும் காமுறுமாறு மலர்க்கணைகளை ஏவும் மன்மதனை ஏவி ஈசனார்மேல் ஐங்கணைகளைப் பொழியச்செய்யின் சிவமூர்த்தி யோகத்தினின்றும் நீங்கி அகிலாண்டநாயகியை மணந்து சூராதிகளையழிக்கும் திருக்குமாரனை நல்குவர்; இதுவே செயத்தக்கது" என்றனர்.

அதுகேட்ட பிரமன் "அண்ணலே! நன்று நன்று; இது செயின் எண்ணிய கருமம் கைகூடும்; சமயத்திற்குத் தக்கவாறு கூறினீர்" என்றுகூற, நாராயணர் "வாணிகேள்வ! நீ உடனே மதனனையழைத்து மதி நதி மௌலிபால் அனுப்புதி" என்றனன். மலரவன் மகிழ்ந்து மாயவனைவணங்கி விடைபெற்று இந்திராதி இமையவருடன் தனது மனோவதி நகரையடைந்து பதுமபீடமிசை வீற்றிருந்தனன்.

## காமதகனம்.

மலர்த்தவிசின்மீது வீற்றிருந்த பிரமதேவன் மலர்க்கணைக் கிழவனாகிய மன்மதனை வருமாறு நினைந்தான். மாயவன் மகனும் மன்மதன் உடனே தனது பரிவாரங்களுடன் வந்து நான்முகனை வணங்கி "அண்ணலே! அடியேனை நினைத்த காரணம்யாது? கருணைபுரிந்து கட்டளையிடுவீர்" என்றனன். மலரவன் "மதன! கங்கையை முடித்த கண்ணுதற்கடவுள் மலையரையன் பயந்த மகேஸ்வரியை மணந்துகொள்ளுமாறு நின் மலர்க்கணைகளையேவி சிவமூர்த்தியினது மோனநிலையை யகற்றுதி; எம்பொருட்டாக இக்கருமத்தை நீ செய்தல் வேண்டும். தாமதியாது செல்லுதி" என்றனன்.

கங்கை மிலைச்சிய கண்ணுதல் வெற்பின்
மங்கையை மேவநின் வாளிகள் தூவி
அங்குறை மோன மகற்றினை யின்னே
எங்கள் பொருட்டினில் ஏகுதி யென்றான்

பிரமதேவன் இவ்வண்ணங்கூறிய கொடுமையானதும், விடத்திற்கு நிகரானதுமாகிய தீச்சொல் மன்மதனுடைய செவிவழிச்

சென்று அவனுடைய உள்ளத்தை யுடனே சுட்டுவிட்டது. சிவபிரானது யோகநிலையை யகற்றவேண்டு மென்ற சொல்லே காமனுடைய உள்ளமுழுவதுஞ் சுட்டுவிட்ட தென்னில் பிறைசூடிய பெருமான் அவனுடைய உடம்பை எரிப்பது ஓர் அற்புதமோ? பிரமனது சொல்லைக்கேட்ட மதனன் தனது இருகரங்களாலும் விரைந்து செவிகளைப் பொத்தி ஐந்தெழுத்தையும் மனத்தில் நினைந்து 'ஹரஹர! என்று கூறி "அளப்பரும் பாவத்தைத்தரும் இத்தீய மொழியைக் கேட்கலாயிற்றே" என்று உளம்வருந்தி, அனலில் வாட்டிய தாமரை போல் வாடியமுகத்துடன் பிரமனை நோக்கிப் பின்வருமாறு பேசலாயினன்.

"அண்ணலே! தீயவர்களாயினும் தம்மிடம் வந்தடுக்கில் பெரியோர்கள் உய்யும்வழியாகிய நன்மையைப் புகல்வர் அங்ஙனமிருக்க, அறிவின்மிக்க நின்னைவந்தடுத்த என்னிடம் எக்காரணத்தாலும் உய்யமுடியாத இத்தீய வசனத்தை யுரைத்தனை. என்னிடம் உனக்கு அருள் ஒரு சிறிதும் இல்லை போலும்; என்னுடைய மலர்க்கணைகளால் மயங்காதவர் உலகில் ஒருவருமில்லை. பூதேவியையும் பூந்தவிசில் வைகுஞ் சீதேவியையும், ஏனைய மாதர்களையும் புணர்ந்து போகத் தழுந்துமாறு என் பிதாவாகிய நாராயணமூர்த்தியை மலர்க்கணைகளால் மயங்கச் செய்தேன். வெண்டாமரைமிசை வீற்றிருக்கும் பாமகளைப் புணருமாறும், திலோத்தமையைக் கண்டு உள்ளத்தாற் புணருமாறும், உன்னை எனது கணைகளால் வெற்றி பெற்றேன். இத்துடனமையாது திருமகளை நாராயணர் மார்பில் வைக்கவும், கலைமகளைத் தாங்கள் நாவில் வைக்கவும் செய்தேன். அகலிகையைக் கண்டு காமுறச்செய்து இந்திரனுடைய உடல்முழுவதும் கண்களாகச்செய்தது எனது மலர்க்கணைகளின் வல்லபமன்றோ? தனது பாகனாகிய அருணன் பெண்ணுருவடைந்தபோது அவளைக் கண்டு மயங்கச்செய்து சூரியனைப் புணருமாறுசெய்தது என் கணைகளேயன்றோ? குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரனை குருவின் பத்தினியாகிய தாரையைப் புணர்ந்து புதனென்னும் புதல்வனைப்பெருமாறு செய்தேன். வேதங்களின் நுட்பங்களையுணர்ந்த நல்லறிவுடைய தேவர்கள் யாவரையும் என் கணையால் மயக்கி மாதர்களுக்குக் குற்றேவல் புரியுமாறு செய்தேன். மறை முழுதுணர்ந்த அகத்தியர், அத்திரி, கௌதமன், அறிவிற் சிறந்த காசிபர், வசிட்டர், மரீசி முதலிய முனிச்சிரேட்டர்களது தவவலியை இமைப்பொழுதில் நீக்கி என்வசப்



பட்டுத் தவிக்கச்செய்தேனன்றோ? நால்வகை வருணத்தாராகிய மனிதர்களையும் பெண்மயக்குற்றுப் பீடழியுமாறு செய்தேன். என் வசப்படாது என் கணைகளை வென்றவர் மூவுலகிலும் யாருளர்? எத்திறப்பட்டவரையும் வெற்றிபெற்றேன். ஆயினும் சிவமூர்த்தியை வெல்லுமாறு நினைத்தற்கும் ஆற்றலுளதோ? நாரணனாதி தேவர்களை மயக்கி வெற்றிபெறலாமேயன்றி நதிசூடிய நான்மறை நாயகனும் சிவபரம்பொருளை எனது கணையால் மயக்குவது முடிகின்ற கருமமோ? என்னே நின் கருத்து? மாற்றம் மனங்கழிய நின்ற மகேஸ்வரனை மயக்கவேண்டுமென்று மனத்தால் நினைக்கினும் உய்வுபெறமுடியாது. அனலே வடிவாகிய அரனார்மேல் எனது மலர்க்கணைகளை விடுத்தாலும் அக்கணைகள் அவரிடம் செல்லுமோ? சிவமூர்த்தியினது கரத்திலும் அக்கினி; நகையிலும் அக்கினி; கண்ணிலும் அக்கினி; நடையிலும் அக்கினி; அனற்பிழம்பாகிய அமலனிடம் யான் சென்றால் உய்யும் வகையும் உளதோ? வேண்டுதல் வேண்டாமையிலாத விமலனை யாரே மயக்கவல்லார்? ஏனைய தேவர்களைப் போல் அவரையும் எண்ணினைபோலும்; சண்டமாருதத்தை எதிர்த்து ஒரு பூளைப்பூ வெற்றி பெறுமேயாமாகில் வெண்ணீறணிந்த விடையவனை நான் வெற்றி பெருதல் கூடும். சிவமூர்த்தியை எதிர்த்து அழிந்தவரேயன்றி உய்வு பெற்றவர் யாரேனுமுளரோ? திரிபுரசங்காரகாலத்தில் அரிமுதல் அமரர்கள் குற்றேவல்புரிய முக்கட்பெருமான் புன்கையாலேயே புரமூன்றை ஒரு கணப்பொழுதில் எரித்ததை மறந்தனைபோலும். மூவர் முதல்வ! தேவ தேவ! கண்ணுதற் பரம! என்று துதித்து வழிபாடு செய்த மார்க்கண்டேயரைப் பற்றுமாறு அழல்போல் சினந்துவந்த கூற்றுவனை நம்பன் இடது திருவடியால் உதைத்த அருட்டிறத்தை யறிந்திலைபோலும். முன்னொரு நாள் தாங்களும் தண்டுழாயலங்கல் தாமோதரனும் "பரம்பொருள் யான்" என்று வாதிட்டபோது ஆங்கு வந்த சிவமூர்த்தியை நீ மதியாதிருக்க நினது ஐந்தலைகளில் ஒரு தலையை சிவனார் நகத்தாற் கிள்ளியெறிந்ததை யுணர்ந்திலைகொல்? சலந்தராதி தானவர்கள் சங்கரனாரைப் பகைத்து மாண்டதை யறியாதாருமுளரோ? நின் மகனாகிய தக்கன் புரிந்த வேள்விசாலையிலிருந்தோர் யாவரும் விடையவன்பால் தோன்றிய வீரபத்திரரால் மிகவுந் துன்புற்று வருந்தியதைப் பார்த்திருந்தனையே? அமிர்தமதனம் புரிந்தஞான்று நாமெல்லாம் நடுநடுங்கி பயந்தோடுமாறு தோன்றிய ஆலகால விடத்தையுண்டு நம்மைக்காத்தரு

ளியது அப்பெருமானது அருட்டிறமேயன்றோ? உலகை யழிக்க வந்த கங்காதேவியை சடைமிசையேற்ற தண்ணருள்புரிந்தது அச் சிவமூர்த்தியேயன்றோ? தாருகவனத்திருடிகள் அபிசார வேள்வி செய்து அனுப்பிய யானை, புலி, மான், முயலகன், பாம்பு முதலிய வைகளைச் சிவனார் உரியாகவும், போர்வையாகவும், ஆபரணமாகவும் அணிந்துள்ளதை நீ பார்த்திலையோ? சர்வசங்காரகாலத்தில் கறை மிடற்றண்ணல் தனது நெற்றிக்கண்ணிலிருந்து விழும் ஒரு சிறு பொறியால் உலகங்களெல்லாம் நீறாகி யழிகின்ற பெருந்திறத்தை நீ யறிந்திருந்தும் மறந்தனையோ! இத்தகைய போராற்றலையுடைய பிறைமுடிப்பெருமானை நாயினுங் கடைப்பட்ட அடியேன் எனது கரும்புவில்லைக்கொண்டு மலர்க்கணையேவி ஒருபோதும் போர்புரிய இசையேன். பிழைக்கவேண்டுமென்று நினைப்பவர் யார்தான் இச் செயலைச் செய்வார்? உலகங்களையெல்லாம் படைத்து காத்து அழித்து மறைத்து அருளும் தனிப்பெருந்தலைவனை நானோ மயல் செய்ய வலியுடையேன்? நன்று; நன்று; நினைத்தற்கும் தகுதியில் லேன்'' என்று பற்பல வசனங்களை புரைத்தான்.

இவ்வாறு மன்மதன் மறுத்துக் கூறியதை மலர்மிசை வைகும் நான்முகன் கேட்டு உளம்வருந்தி சிறிதுநேரம் ஆராய்ந்து பெருயிர்ப் புடன் உரைக்கலாயினன். "மதனே! ஒருவராலும் வெல்லுதற்கரிய சிவபெருமானது அருட்பெருங் குணங்களை வெள்ளறிவுடைய விண்ணவரிடம் விளம்புவதுபோல் என்னிடம் விளப்பினை. நீ யுரைத்தவெல் லாம் உண்மையே; தனக்குவமையில்லாத கயிலைநாயகனை வெல்வது எளிதன்று; யவர்க்கும் அரியதே. ஆயினும், தன்னையடைந்தோர் தாபத்தைத் தவிர்க்கும் தயாபரனும் சிவமூர்த்தியினது நல்லருளால் இக்கருமம் முடிவடையும் அவனருள் பெறுதலால் முடித்தற்கரிய தாம். நினைந்து பார்க்கில் இக்கருமத்தை முடித்தற்கு நீ தான் சிறந்த காரணனும். அவனருளின்றி யணுவு மசையாது. எல்லாருடைய செயலும் அவன் செயலே. நீ யிப்போது கண்ணுதலை மயக்கச் செல்லுவதும் அவருடைய செயலேயாகும். தேவர்களெல்லாம் சூழ்ந்திருந்தபோது சிவபெருமான் யட்சனைப்போல்வந்து ஒரு துரும்பை நிறுத்தி அதனை வாயுவினாலும் அக்கினியினாலும் ஏனைய தேவர்களாலும் அசைக்கவும் எரிக்கவும் பிறசெய்யவும் முடியாது திகைத்திருக்குமாறு செய்த பெருந்திறத்தையறிந்திருந்தும் நம்மால் ஒரு கருமம் முடியுமென்பது நாணத்திற்கிடமன்றோ? நாம் பேசுவதும்



நடப்பதும் பார்ப்பதும் செய்வதும் அவன் திருவருட்செயலே. ஆதலால் நீ கரும்புவில்லை வளைத்து பூங்கணைகளை ஏவுமாறு செல்லுதி; இதுவும் அவனருளே; ஐயமில்லை. இது சரதம்.

இஃதன்றி ஆற்றவொணாத் துன்பங்கொண்டு யாராவது ஒருவரையடுத்து "உதவிசெய்" என்று இரந்தால் அவருடைய துன்பத்தைக் கண்டு இரங்கி அவருடைய துன்பத்தை களையாது தன்னுயிரைப் பெரிதென்றெண்ணி உயிருடனிருத்தல் தருமமோ? அது அறத்தின் வழி நின்றார்க்கு ஏற்றதாகுமோ? ஒருவனுக்கு ஒரு துன்பம் நேர்ந்தால் அத்துன்பத்தைத் தன்னால் நீக்க முடியுமேல் அவன் சொல்லாமுன்னம் தானே வலிந்து துன்பத்தை நீக்குதல் உத்தமம்; அவன் வந்து இத்துன்பத்தை நீக்குதல் வேண்டுமென்று சொன்னபின் நீக்குதல் மத்திமம்; பலநாள் வேண்டிக் கொள்ள மறுத்தும் பின்னர் நீக்குதல் அதமம். யாராவது இடருற்றனரேல் அவரது இடரை யகற்றுதற்பொருட்டு தன்னுயிரை விடுதலுந் தருமமே. தன்னுயிர்க்குப் பயந்து அத்துன்பத்தை நீக்க மறுப்பரேல் பாவமட்டுமல்ல, அகலாத பழியும் வந்துசேரும்.

ஏவ வெனினும் இடருற்றன ராகில்
ஓவில் துணைபோ லுளரேல் அதுமுடித்தல்
காவி விடினும் அறனே மறுத்தனரேல்
பாவ மலது பழியும் ஒழியாதே

பிறர்க்குதவி செய்யாது கழித்தோன் வாழ்நாள் வீணாளாகும். தண்டுழாய் முடியோனுடன் வாதியற்றிய ததீசிமுனிவரை தேவர் கோமான் குறையிரப்ப, விருத்தாசுரனை வதைக்கும் பொருட்டுத் தனது முதுகெலும்பைத்தந்து ததீசிமுனிவர் உயிரிழந்த செய்தியை நீ கேட்டதில்லையோ? பாற்கடலில் எழுந்த வடவாமுகாக்கினியனைய விடத்தினைக்கண்டு நாம் பயந்தபோது திருமால் நம்மைக்காத்தற் பொருட்டு அஞ்சேல் என்று கூறி அவ்விடத்தின் எதிரில் ஒரு கணப் பொழுது நின்று தமது வெண்ணிறம் பொருந்திய திருமேனி கருமை நிறத்தை யடைந்ததை நீ பார்த்ததில்லையோ? பிறர்பொருட்டுத் தம்முயிரை மிகச் சிறிய பொருளாக எண்ணுவோர் உலகில் புகழ் பெற்று வாழ்வார்கள். யாம் சூரபன்மனால் மிகவும் வருந்தினோம். அவ் வருத்தம் தீரும்படி கண்ணுதற்பெருமான் ஒரு புதல்வனை தோற்றுவித்தற்பொருட்டு நீ பஞ்சபாணங்களுடன் செல்லவேண்டும். எமது வேண்டுகோளை நீ மறுத்தல் தகுதியன்று" என்று பலவாராக பிரமன் கூறினன்.

(தொடரும்.)

உ

ஓம் குஹாய நம :

# கதிர்காமம்

"கதலி நாகந் தினிற் பயிலு மீழத்தினிற்
கதிர காமக் கிரிப் பெருமாளே"

கதிர்காமக்ஷேத்திரத்தைப் பற்றியும் அதன் வரலாறு வழி முதலியவற்றையும் அறிந்துகொள்ளவேண்டுமென்று பல அன்பர்கள் விரும்பிப் பன்முறையுங் கேட்டுக்கொண்டதனால் இதனை ஒருவாறு விளக்கலானேன்.

முன்னொருகாலத்தில் வாயுதேவனாற் பறித்தெறிந்த மேருகிரியின் சிகரங்கள்மூன்றனுள் ஒன்று இலங்கை மண்டலம். அதற்கு தக்கிண கயிலை, பொன்னகரம், ஈழம் (சிலோன்) முதலிய பல நாமங்களுள. இம்மண்டலத்தை சூரபன்மன், இராவணன், குபேரன், மது, உக்கிர வழுதி, வீடணன், தொண்டமானிளந்திரையன், நல்லியக்கோடன், குளக்கோடன், உக்கிரசோழன், வாலசிங்கன், சிங்கையாரியன், அரசகேசரி பரராசசேகரன், செகராசசேகரன், முதலிய பற்பல மன்னர் அரசாண்டனர். ஆகமம் ஸ்மிருதியாதி வடமொழி நூல்களும், தேவாரம் திருப்புகழாதி தென்மொழி நூல்களும் இதனைப் புகழ்கின்றன. இவ்விலங்கை விராட்புருடனுக்கு இடைநாடியாயிலங்குவது. திரிகூடம், கேதீஸ்வரம், கந்தமாதனம், ஏமகூடம், நீலம், சுவேலம், சிவனொளிபாதம், செங்கடம், வள்ளி, காளபைரவம், நகுலம், மேந்தலை, மகானுவரம், சீவர்த்தனம், உகந்தை, கதிரை முதலிய மலைகளாலும், மாவலிகங்கை, கருடகங்கை, காவிரிகங்கை, மாணிக்க கங்கை, பாலாவி, பாபநாசம், நவகங்கை, மாயவனாறு, கழுநீர்க் கங்கை, வேலாயுத புட்கரணி, கன்யாகங்கை, நகுலம், சமுத்திர தீர்த்தம், பாதலகங்கை, கல்லாறு, நவகிரி, திருவடுநிலை, யமுனாரி, நிலாவிரி, வாமனம் முதலிய தீர்த்தங்களாலும், கண்டி கொழும்பு முதலிய நகரங்களாலும் அலங்கரிக்கப்பட்டு காண்பார் கண் கவருங்கவினையுடையதாய் விளங்குவது இத்தீவு. சூரபன்மனுடைய வீரமகேந்திரபுரியைச் சூழ்ந்திருந்த எட்டுத்தீவுகளில் இது வடபுறத்தில் இருந்தது.



இத்தகைய இலங்காத்வீபத்தின் தென்கோடியில் மகாபுனிதந் தங்கிய இடத்தில் விளங்குகின்றது கதிர்காம க்ஷேத்திரம்.

சூரபன்மன் தேவர்களையும் தேவமாதர்களையுஞ் இந்திர குமாரனாகிய சயந்தனையுஞ் சிறையிட, அதனை மீட்டருள்புரியுமாறு குமாரக்கடவுள் இலக்கத்தொன்பான் வீரர்களுடனும் பூதவெள்ளங்களுடனும் கயிலையினின்றும் புறப்பட்டு, தாரகனைக்கொன்று செந்திலம்பதி சென்று அங்கிருந்து கடலைக்கடந்து இலங்கைமண்டலத்தையடைந்து அதன் தென்கோடியில் சென்றவுடனே, நான்முகனும் நாரணனும் பணிந்து, "எம்மையாட்கொள்ளும் பொருட்டு எழுந்தருளிய எந்தையே! சூரபன்மன் வாழும் மகேந்திரபுரி நீசர்களுக்கிருப்பிடமாதலால் ஆங்கு தேவரீர் செல்லுவது தகுதியன்று" என்றுகூற, கதிர்வேலண்ணல் தேவகம்மியனாகிய விசுவகருமனைத் திருநோக்கஞ் செய்தருளி, "இங்கு ஓர் நகரமைத்தி" என்னலும், உடனே அவன் வானளாவிய கோபுரங்களும், மணிமண்டபங்களும், நெடுந் தெருக்களும், மத்தியில் எம்பெருமானிருத்தற்கு அழகிய திருக்கோயிலுமாக ஏமகூடம் என்னும் ஓர் நகரை உண்டாக்கினான். (தங்கத்தால் செய்ததால் அதற்கு ஏமகூடம் எனப்பெயருண்டாயிற்று) முருகவேள் அந்த ஏம கூடத்தில் தங்கி இருந்து சூராதிகளை யழித்து இந்திராதி தேவர்களைக் காத்தருள் புரிந்தனர். இந்த ஏமகூடந்தான் கதிர்காமமாகும். இத்தலத்தே முருகப்பெருமான் ஆறுதிருமுகங்களும், பதினெட்டுத் திருக்கண்களும், மணமருத கடப்பமலர் மாலையணிந்த திருமார்பும், வலத்திருக்கரங்களிலே கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல், அபயம் என்பவும், இடத்திருக்கரங்களிலே தாமரை, கண்டாமணி, மழு, தண்டு, வில், வரதம் என்பவும் அமைந்த பன்னிரு திருப்புயங்களும்கொண்டு, கோடி சூரியப் பிரகாசமான திருமேனியுங் கொண்டு வீரமூர்த்தியாய் இலக்கத்தொன்பான் வீரர்களும், ஈராயிரம் பூதவெள்ளங்களும், அரியயனாதி அமரர் குழாங்களும் சூழ வீற்றிருந்தருளினர். பகவான் இத்தலத்தில் போர்க்கோலத்துடன் எழுந்தருளியிருத்தலால் அத்திருக்கோலத்தை மானுடராகிய சிறியேம் தரிசிக்க வியலாதென்று மூலத்தான மடைக்கப்பட்டு மூர்த்தியும் அவ்வியக்கமாயினர்.

கதிர்காமம் என்பதன் பொருள் : கதிர்-ஒளி, காமம் - இன்பம் எனவே ஆன்மாக்களுக்குச் சிவஞானவொளியினாற் பேரின்பத்தையளிப்பது என்பதாம் பரஞ்சுடராகிய சுப்பிரமண்யமூர்த்தி இன்பத்

துடன் உறைவது எனவுமாம். கதிர் - சூரிய சந்திரர்களால், காமம் - விரும்பிப் பூசிக்கப்பட்டதெனவும் பொருள்படும். இத்தலத்திற்கு தக்கிண கந்தபுரி, எமகூடம், அம்சுகாமம், கதிரை, பூலோககந்தபுரி, கோட்டம், வன்னிமங்கலம், காரிகாப்பு, வரபுரி, பஞ்சமூர்த்திவாசம், சகல தேவோபாசியம், கதிக்கேணி, சகல சித்திகரம், அகத்தியப்பிரியம், சிதாகாசம், குகைத்தலம், தகராலயம், பிரமசித்து, மகத்து, விவிக்தம், ககனம், பரிசுத்தம், அற்புதம், பாசறை, அம்பலம், பாவியோமம், இரண்மயகோசம், அந்தராகாசம், அவ்யக்தமூர்த்திபுரி, கதிர்காமம் எனப் பற்பல திருநாமங்களுள. இந்த க்ஷேத்திரத்தில் குமாரக்கடவுள் கணப்பொழுதும் நீங்காதிருந்து, இச்சாசக்தியாகிய வள்ளியம்மையாருடனும், கிரியாசக்தியாகிய தெய்வகுஞ்சரியம்மையாருடனும், அமர்ந்து பற்பல திருவிளையாடல்களைப் புரிந்தருள்வார். தேவர் முதலிய கணர்கள்தான் ஆண்டவனை உள்ளே ஆராதிக்கிறார்கள்.

அநுமார் கணையாழியைப்பெற்று இராமமூர்த்தியின்பால் விடைபெற்று சீதையைத் தேடிக்கொண்டு இலங்கைக்குச் சென்றபோது இக்கதிர் காமமூர்த்தியாகிய கந்தவேளைவழிபட்டு முருகனருள் பெற்றுச்சென்றனர். இதனை அருணகிரிநாதர்

அருட்பொற் றிருவாழி மோதிர
மளித்துத் தளர்மேல் மனோகர
மளித்துக் கதிர்காம மேவிய பெருமாளே
—(உடுக்கை) திருப்புகழ்.

இத்தலத்தின் பெருமை அளவிடற்கரியது. அருணகிரி சுவாமிகளால் பாடப்பெற்ற 13 திருப்புகழ் பாடல்களுள.

படைவீட்டுத்தலங்களாகிய திருப்பரங்குன்றமுதலிய ஆறு தாரதலங்களினும் மேலாய துவாதசாந்தத்தலமாய் விளங்குவது இக்கதிர்காமக்ஷேத்திரம். அன்றியும் சில தலங்களிலே கோயில் என்னும் சிதம்பரம் ஆகாயலிங்கமுடைத்தா மிரகசியத்தலமானதுபோல், இக்கதிர்காமமும் அங்ஙனமே சோதிவடிவினரா யெவராலும் விரும்பத்தகுந்த பாவியோமமூர்த்தி, எவர்களாலும் காண்டற்கரியராய் விளங்கலின் இரகசியத்தலமாய்விளங்கும். இங்ஙனுள்ள தீர்த்தங்களோ மாணிக்க கங்கை முதலாக அளவற்றன. மலைகளோ: கதிரைமலை, வள்ளிமலை,



தெய்வயானைமலை, காளபைரவமலை, முதலாக எண்ணிலாதன. சிவ கணேச உமாவீரபைரவ மகாசாத்த நவலக்க வீர புட்கலேச ராம காளிய சுராரி துர்க்கை முதலிய பலமூர்த்திகள் முருகவேளை உபாசித்து நாற்புறங்களினும் வசித்துளார்கள்.

## கதிர்காம யாத்திரை.

இத்தகைய அற்புத க்ஷேத்திரத்திற்குச் செல்லவேண்டுமென்று நெடுநாளாக அடியேனும் எமது திருப்புகழ்சபையோரும் அன்புகூர்ந்திருந்தோம். ஸ்ரீமுக வருஷ ஆடி மீ 11-உ (26-7-'33) புதன்கிழமை திருப்புகழ் கோஷ்டியுடன் புறப்பட்டு தனுஷ்கோடியைச் சார்ந்துள்ள மண்டபம் போய் ஆங்கிருந்து தனுஷ்கோடியில் (28-7-'33) மாலை 4-30 மணிக்குக் கப்பலேறினோம், இரவு 8-மணிக்கு இலங்கையின் கரையாகிய தலைமன்னார் சென்றோம். தனுஷ்கோடிக்கும் தலைமன்னார்க்கும் ஏறக்குறைய 24 மைல் என்பர் பின்னர் தலைமன்னாரில் உடனே ரயிலேறி மறுநாள் காலை 7½-மணிக்கு கொழும்பு சேர்ந்தோம். 30-7-'33-ல் கொழும்பிலிருந்து புறப்பட்டு காலை 8-மணிக்கு ரயிலேறி காலி மார்க்கமாகப்போய் பகல் 1½-மணிக்கு மாத்திரைக்கு போனோம், அங்கே இரண்டு கூட்டத்தார்கள இருபுறத்திலே நின்று ரயிலடியிலேயிருந்து "எங்களிடம் வந்து சாப்பிடுங்கள" ;"எங்களிடம் வாருங்கள்" என்று உபசரிக்கும் காக்ஷி மிகவும் நன்றாக இருக்கும். அவர்கள் கொடிகளுடன பரிவோடழைத்து உணவு தருகிறார்கள். உணவு உண்டவுடன் காபி முதலிய பானங்களைத்தருகிறார்கள். மாத்திரை வரையிலுந்தான் ரயில். அங்கிருந்து 75 மைல் பஸ்மூலமாக திசைமாறு என்ற ஊருக்கு மாலை 6-மணிக்குச் சேர்ந்தோம். அங்கிருந்து கதிர்காமம் சற்றேறக்குறைய 13 மைல். திசைமாறுவிலிருந்து இரவு 7-மணிக்குப் புறப்பட்டு கால்நடையாக இரவு 2-மணிக்குக் கதிர்காமம் சேர்ந்தோம். திசைமாறுவிலிருந்து கதிர்காமம் போகிறவரை பெருங்காடு; பள்ளமும் மேடுமான வழிதான். சாமான்களை ஏற்றிக்கொண்டு சிலவண்டிகள் போகின்றன. ஆனால் எதிரில் வண்டிவந்துவிட்டால் வண்டி ஒதுங்க இடமின்றி சிரமப்படுகின்றனர். சிங்களவர்தான் வண்டி ஓட்டுகின்றனர் அவர்கள் வண்டியை கர்த்தை என்கின்றனர். அடர்ந்த காடு; இருபுறத்திலும் காண்பதற்கு பயங்கரமாயிருக்கிறது.

ஜனங்கள் திசைமாருவிலிருந்து கதிர்காமம் போகிறபோதும் திரும்பி வருகிறபோதும், கதிர்காமத்தில் வசிக்கும்போதும் வாய் ஓயாமல் ஹரோ ஹரா ஹரோ ஹரா என்று கூவி ஓலமிடுகின்றனர். பெரும்பாலும் இரவிலேயே செல்லுகின்றனர்; மிருகாதிகள் நிறைந்த காடு; வானளாவி வளர்ந்த தருக்களால் அக்காடு வளம்பெற்றுளது; ஆடிமாசம் அமாவாசையிலிருந்து பௌர்ணமி வரைக்கும் கதிர்காமத்தில் உத்சவம்; அந்தக்காலத்தில்தான் செல்லமுடியும்; ஏனையகாலங்களில் செல்லமுடியாது என்கின்றனர்; ஆடி பௌர்ணமியன்று தீர்த்தவாரி; அதற்குமேல் ஒருநாள்கூட அங்கு தங்கக்கூடாதென்கின்றனர். அந்தப் பதினைந்துநாளும் ஜனங்கள் இலட்சக்கணக்கான அன்பர்கள் ஹரோ ஹரா என்ற முழக்கத்துடன் போவதும் வருவதுமாக இருக்கிறார்கள். அந்த காக்ஷி காண்பதற்கு இனிமையாயிருக்கும்.

கதிர்காமமானது அந்த பெருங்காட்டின் நடுவில் மாணிக்க நதியின்கரையிலுள்ளது. அந்த நதி தெள்ளிய நீரால் காண்பார் கண்களைக்கவரும் கவினுடையதாய் எக்காலத்தும் நீரோடுவதாய் ஊசி வீழ்ந்தாலும் தெரியக்கூடிய அத்துணைப் பரிசுத்தமுடையதாய் விளங்குகிறது இதனை அருணகிரியாரும்

"மணிதரளம்வீசி யணியருவி சூழ
மருவுகதிர்காமப் பெருமாள் காண்"
—(திருமக) திருப்புகழ்.

அத்தலத்தில் ஓலை வீடுகளும், இரண்டு மூன்று சத்திரங்களும் உள; இரண்டே தெருக்கள்தான். கதிர்காமக்கோயில் ஒரு மதிளுக்கு மத்தியில் இலகுகின்றது; ஓட்டுக்கோயில்தான். அது மூன்று பிரிவாகவுளது. ஒரு பிரிவில்தான் தரிசனைக்குப் போகும் அன்பர்கள் நிற்கிறார்கள். அதற்கடுத்த பிரிவில் வரிசையாக முருகக்கடவுள் திருவுருவம் பொறித்த திரைகளைத் தொங்கவிட்டுள. மூன்றாவது நிலை பூட்டப்பட்டுளதாம். அந்த நிலையில்தான் சுவாமி வீற்றிருக்கிறார். அதில் ஒருவரும் சென்றதேயில்லை. அங்கு ஆராதனை செய்கின்றவர்கள் சிங்களவர்கள். அவர்கள் அங்கியணிந்து தலைப்பாகையுடன் தாம்பூலமடக்கிய வாயுடன் இருக்கின்றனர். அவர்களிடம் தேங்காய்ப்பழங்களைத்தந்தால் அந்தத் திரைகளில் ஒரு திரையைத்தாண்டி ஆராதனைசெய்து விபூதி முதலிய பிரசாதங்களைத் தருகின்றனர்.



அந்த அர்ச்சகர்களுக்குக் கப்பரையாள் என்று அங்கு பேர். அவர்கள் பார்வைக்கு ஆசாரமில்லாதவர்களாகத் தோன்றுகிறார்கள். ஆயினும் தெய்வபக்தி நிறைந்தவர்களாம். கதிர்காம எல்லையை மிதித்தவுடன் எல்லோரும் ஆனந்தபரவசராகி அன்புமயமாகத் திகழ்கின்றனர். ஆலயத்தில் நுழைந்தவுடன் கண்ணீர்சொரிந்து அஞ்சலியஸ்தராகநின்று ஆண்டவனையழைத்து பக்திசெய்கின்ற காக்ஷி கல்மனத்தையுமுருக்கிவிடும். அக்காக்ஷியை நினைக்கும்போதே மயிர் சிலிர்க்கும்.

காலைமுதற்கொண்டு மாலைவரை தரிசனார்த்த பக்தகோடிகள் உடம்பில் வேல்களை நிரம்பக்குத்திக்கொண்டு மாணிக்க நதியில் நீராடி பலவகையான காவடிகளை எடுத்துக்கொண்டு சென்றவண்ணமாகவே இருக்கிறார்கள். கதிர்காமத்திலிருந்து அக்கினி திக்கில் 3 மைலில் விபூதிசுரங்கமென்று ஒன்றுளது அங்கு பூமியைப்பறித்தால் வெள்ளை விபூதிபோன்ற மண் கிடைக்கிறது. அந்த விபூதியைக் கொண்டுவந்து புதுச்சட்டியிலிட்டு தலைமீதுவைத்து அதில் நிறையக் கற்பூரத்தைக்கொட்டி ஏற்றி மாலை 5 மணியிலிருந்து மாணிக்க நதியில் நீராடி கூட்டங்கூட்டமாக கற்பூரதீபங்களை எடுத்துக்கொண்டு கோயிலுக்குப் போகிறார்கள். அப்படி போகும் கற்பூரதீபங்கள் ஆயிரக்கணக்காகப் பிரகாசிக்கின்றன. எங்கு பார்த்தாலும் கற்பூரதீபமாகவே இலங்குகின்றன. லக்ஷதீபம்போல் அந்தக்காக்ஷி மிகவும் அழகாக இருக்கிறது. அந்த மாலை நேரத்தில் கதிர்காமம் கந்தலோகம்போல் பார்ப்போர்களது மனத்தை அப்படியே பரவசப்படுத்துகிறது. அக்காக்ஷியை நினைக்குந்தோறும் இன்றும் கண்முன்நின்று நிலவுகிறது மறக்கமுடியாததும் பார்க்கத்தகுந்ததுமாகிய அக்காக்ஷியைக்காணாத கண் கண்ணல்ல. கருங் கல்மனதாயிருந்தாலும் அதைக் கண்டவுடனே நீராயுருகி நெகிழும்.

இரவு 10-மணிக்குமேல் ஏதோ ஒரு பெட்டி அந்தத் திரைக்குள்ளிருந்து எடுத்து அதையும் அதை எடுப்பவரையும் ஆடையால் மூடி யானைமேல்வைத்து பவனிகொண்டுவருகிறார்கள்; இதுதான் உத்சவம்; மேளதாளங்களுடன் வருகிறது. அதன்பிறகு யாம் திருப்புகழ் கோஷ்டி நிகழ்த்தினோம்; திருப்புகழைப்பாடி அதன் தத்துவங்களை எடுத்து வியாக்கியானம் புரிகின்றகாலை அந்த ஜனங்கள் மிகவும் ஊக்கத்துடனும் பக்தியுடனும் கேட்டுக்கொண்டுவந்தார்கள். பிரசங்கத்

தில் மிகுந்த இனிமையானபாகம் வரும்போதெல்லாம் அந்த ஜனங்கள் ஹரோ ஹரா ஹரோ ஹரா என்று முழக்கஞ்செய்து காட்டிய பேரன்பை எக்காலத்தும் மறக்கமுடியாது. கோஷ்டி விடியற்காலம் 4-மணிக்கு முடிவடைகின்றகாலத்தில் எல்லா ஜனங்களும் ஓவென்று கதறியழுது 10 நாளும் நீங்கள் இருந்து இந்தமாதிரி திருப்புகழ் கோஷ்டியும் அதன் தத்துவார்த்த வியாக்யானமும் செய்யவேண்டுமென வேண்டி மன்றாடினார்கள்.

மறுநாள் காலை கதிர்காமத்திலிருந்து காட்டுமார்க்கமாக 3 மைல் சென்று அங்கு கதிர்மலை என்ற மலையின்மீது மிகுந்த சிரமப்பட்டு ஏறினோம்; மிகவும் பெரியமலை; ஏழு பிரிவாக இருக்கிறது அம்மலை; ஏறும் வழியில் ஆங்காங்கு காபி முதலிய இனிய பானங்களை உபசாரத்தோடு தருமம் புரிகின்றனர். உச்சியில் ஒரு வேல் இருக்கிறது. அங்குபோனவுடன் எல்லோரும் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி "ஹரோ ஹரா" என்று கதறுகின்றனர். ஒரு சிலர் "அப்பு" "அப்பு" என்று கண்துளி சிந்தக் கதறுகின்றனர். அக்காக்ஷியைக் கண்டு திரும்பி கதிர்காமம் சேர்ந்தோம். அன்று இரவு முன்னாள் நிகழ்த்தியவாறு திருப்புகழ்கோஷ்டி நிகழ்த்தினோம்.

கோயிலுக்குப் பின்புறத்தில் வானளாவிய ஓர் அரசமரமுளது; ஒரு சிறு விநாயகச்சந்நிதியும், புத்தர்கோயிலும், தேவயானையம்மையார் சந்நிதியுமுள. ஊருக்குக் கிழக்கே வள்ளியம்மையார் சந்நிதியுளது. அந்த ஊரில் உத்சவமல்லாத காலங்களில் யானைகள் மந்தை மந்தையாகவந்து உலவுகிறதாம். உத்சவகாலத்தில் மட்டும் ஆண்டவனருளால் மிருகாதிகளால் இடைஞ்சல் இல்லை.

அடுத்தநாள் கதிர்காமத்திற்கு வடக்கே 3 மைலிலுள்ள செல்வக் கதிர்காமஞ் சென்றிருந்தோம்; அங்கு மாணிக்க விநாயகர் சந்நிதியொன்றுளது; அங்கே மாணிக்க நதி மிகவும் மனோகரமாயுளது. ரிஷிகேஸ்வரத்தின் ஞாபகத்தையுண்டுபண்ணுகிறது. மறுநாள் திரும்பி முன் சொன்ன மார்க்கமாக தனுஷ்கோடி சேர்ந்தோம்.

இத்தகைய புண்ணியக்ஷேத்திரமாகிய கதிர்காமத்தை அன்புடன் சேவிப்பார்க்கு இகபரநலன்கள் எளிதிலுண்டாகும். பண்டைத் தவமிருந்தாலொழிய இக்கதிர்காமதெரிசனம் கிடைக்காது. ஏமகூடமென்னும் கதிர்காமத்தில் வாழுங் கதிர்வேலண்ணல் அன்பர்கள் அனைவருக்கும் எல்லா நலன்களையுமீந்து இன்னருள் புரிவாராக.



மாணிக்க நிறைகங்கை யாடியுன் னைப்பணிய
வந்திடும் பூதலத் தோர்
வாயுமர் பாடவுங் குருடர்கண் பார்த்திடவு
மலடிகள்பின் மைந்தர் பெறவும்
காணிற்த மாரவே லாவென்று மன்பரைக்
காடி புலி யானை சிங்கங்
காலிற் பணிந்தஞ்சி யோடவுங் கந்தனே
கண்கண்ட தெய்வ மெனவே
ஆணிப்பொன் முத்திமண் டபமேவு கச்சியினுள்
அடியேனை யாண்டு கொண்டேன்
ஆகத்தில் வந்தபிணி தீர்த்திடவு முன்னிற்கும்
ஆறுமுக மெய்த் தெய்வமே
சேணிற் புலோமசை வளர்த்தபெண் பிடிகணவ
செங்கீரை யாடி யருளே
தேவரொடு மனிதர்மணி கதிர்காம வேலனே
செங்கீரை யாடி யருளே.

---

# வினா விடை மணிகள்.

## ஆதி சங்கரர்.

க: பத்யத ரோதர்ம: க: ஸுசிரிஹ யஸ்ய மானஸம் ஸுத்தம்.
க: பண்டிதோ விவேகிம் விஷமவதீர்ணா குருஷு ||

கே,—எது பத்தியம்? (ஹிதமானது).

ப:—தர்மம்.

கே:—எவன் சுத்தன்?

ப:—எவன் மனது சுத்தமாக இருக்கிறதோ அவன்.

கே:—எவன் பண்டிதன்?

ப:—விவேகி. (விவேகத்தை யுடையவன்).

கே:—எது விஷம்?

ப:—பெரியார்வார்த்தையை அலட்சியம் செய்வது.

உ

ஓம் குஹாய நம:

# குரு சிஷ்ய லக்ஷணம்

(62-ம் பக்கத் தொடர்ச்சி)

## சச்சிதானந்தன்.

### குருவின் அவசியம்.

குருநாதனில்லாமல் ஒருவரும் இருக்கப்படாது ; ஏனெனில் எவ்விதம் சுருசுருப்பில்லாத புத்தியும், பக்தியில்லாத பூஜையும், அரசனில்லாத நகரமும், தானங்கள் செய்யாத கரங்களும், விசுவாசமில்லாத சிநேகமும், பூததயையில்லாத தவமும், பரோபகாரமில்லாத பிரயாசையும், விபூதியில்லாத நெற்றியும், பிரயோஜனமற்றதே : அதுபோல் குருபதேசமில்லாத ஜன்மமும் வீணேயாகும். எப்படி பெண்ணானவள் நாயகனில்லாமலிருந்தால் நிந்திக்கப்படுவாளோ அதுபோல் நாமும் குருநாதனில்லாமலிருந்தால் நிந்திக்கப்பட்டு நற்கதி சேரமாட்டோம்.

ஜகத்குருவாகிய சங்கராசார்ய சுவாமிகளும் யாவருக்கும் எப்படி விதிக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே நடக்க வேண்டுமென்று சற்குருநாதனைத் தேடினாரென்று அவர் சரிதையில் நாம் கண்ணுறுகிறோம். ஆகவே சகலராகிய நாம் குருநாதனில்லாமல் இருக்கப்படாதென்பதற்கு ஆதிசங்கரருடைய சரித்திரமே போதியசான்று. சிற்சிலர் கூறுகிறார்கள் குருவும் நம்மைப்போல் மனிதர்தானே? அவரும் மாதா உதரத்திலிருந்தவர்தானே? அவரிடத்தில் எதற்காக நாம் உபதேசம் பெறவேண்டும்? அவர் சொல்வதெல்லாம் சாஸ்திரத்தில் இருக்கிறது? நாமே நல்ல நல்ல கிரந்தங்களை வாசித்துக்கொண்டு அந்தப்படி அப்யாசம்செய்தால் நமக்கு தானே ஞானமுண்டாகிவிடும்; ஆகையால் குரு எதற்கு? குரு அநாவசியமென்றும், நம்மைக் காட்டிலும் குருவுக்கென்ன அதிகமாய்த்தெரியும்? எல்லாம் நமக்கு தெரிந்தவைகளையே அவரும் சொல்லுகிறார் என்னும் விபரீத பாவனையாக எண்ணுகிறார்கள் ; அவர்களுடைய அறிவீனத்தனம் என்னே! அவர்கள் நினைப்பானது எதுபோலுள தென்றால், ஒரு பெண்ணானவள் தன் நாயகனைக் கொன்று சந்ததி விளக்குவதற்காக மகவை வேண்டி தவமிருப்பது போலொக்கும் ; இதை பதிபசுபாச விளக்கத்தில்



முந்து நூலுழைப்பு மின்றி முத்தர்பாலிணக்க மின்றி
சுந்தரக் குரவன் பாதத் தொழும்புகள் சிறிது மின்றி
யந்தமில் ஞானம் வேண்டு மவாவெலாங் கொழநற் கொன்று
சந்ததி வேண்டி நோற்குந் தன்மையோ டொக்கு மன்றே

என்றனர்.

ஆயுள்முழுதும் சகல சாஸ்திரங்களையும் சங்கையின்றிப் படித்தாலும் சுகத்தையடையமாட்டான் ; படிப்பினால் புத்தி நுட்பமட்டும் விளையுமே யன்றி ஞானத்தையடையான் ; குருபதேசத்தினால்தான் ஞானத்தை யடையமுடியும். நான்கு வேதங்களையும் ஆறு சாஸ்திரங்களையும், சப்தகோடி மஹா மந்திரங்களையும், யந்திரங்களையும் தெரிந்ததனாலேயே பிரஹ்மஞானமென்னும் சுகமுண்டாகமாட்டாது ; சற்குரு கடாக்ஷத்தினாலேயே பிரம்மானந்தமான மோக்ஷ சாதனமுண்டாகுமென்று ஹரிஹராதி தேவதைகளும் கூறியுள்ளார்கள். மஹா நாராயணோபநிஷத்தில் ஐந்தாவது அத்யாயத்தில்

யதா ஜாத்யந்தஸ்ய ஸ்வரூபக்ஞானம் நவித்யதே
ததா குருபதேசே நவினா !! கல்பகோடிசதைரபி
தத்வஜ்ஞான நஜாயதே

பிறவிக்குருடனுக்கு வஸ்துக்களுடைய சுவரூபஜ்ஞானம் எப்படி விளங்காதோ அப்படி குருபதேசமின்றி நூறுகோடி கல்பங்களானாலும் தத்வஜ்ஞான முண்டாகமாட்டாது. ஆனால் ஒரு தெய்வயோகத்தால் ஞானத்தையடைந்தாலும் அந்த ஞானமானது எதுபோலொக்குமெனில்

குருவிலான் பெற்ற ஞானம் குமரியைக் குமரிகூடி
மருவிய இன்பமொக்கு . . . . . . .
குருவினுற் பெற்ற ஞானங் குமரியைக் குமரன்கூடி
மருவிய இன்பமொக்கு மென்பர்நன் மதியுளோரே.

—பதிபசுபாசவிளக்கம்.

நாரதரும்.

புத்தகத்திலிருக்கிற வித்தையும் குருநாதனிடத்தில் அப்யாசம் செய்யப்படாத வித்தையும் சபையில் ப்ரயோஜனப்படாது; எப்படியெனில் கள்ளப்புருஷனிடத்திலிருந்து அடையப்பட்ட கர்ப்பமானது ஸ்திரீகளுக்குப் பயன்படமாட்டாது போலென்க" என்று கூறியிருக்கிறார்.

மேலும் குருநாதரானவர் தேற்றாங்கொட்டையைப்போலவும், ஒரு வண்டை (குளவி) போலவும் ஞாயிறுபோலவும், *பரிசன வேதியைப்போலவும் இருக்கிறார், தேற்றாங்கொட்டையானது தண்ணீரிலுள்ள அழுக்குகளை நீக்கி தெளிவிப்பதுபோல சீடனுடைய மன அழுக்கைப் போக்கடித்து தெளிவிக்கிறார். குளவியானது ஒரு புழுவைக்கொண்டுவந்து ஒரு மண் கூட்டிலடைத்து ஊதிக் குளவியாய் செய்வதுபோல் ஞானமில்லாதவனுக்கு நல்ல மந்திரோபதேசங்களைச் செய்து ஞானத்தை உண்டுபண்ணுவித்து தன்னைப்போல் சீடனையும் செய்துவிடுகிறார்.

சூரியனானவன் மூடுபனியைப் போக்கடிப்பதுபோல் சீடனுடைய மனதை மூடிக்கொண்டிருக்கிற வஞ்சகம் முதலிய துர்க்குணங்களைக் களைந்தெரிகிறார்.

சாமான்ய உலோகங்களையும் பொன்னாக மாற்றுகிற பரிசன வேதியைப்போல் கேவலம் ஞானசூன்யனாயிருக்கிறவனையும் ஞானவானாகச் செய்கிறார். இதனை த்யாகராஜரும்

குருவு சில்ல கீந் குருவே ப்ரமமு
குருடே பாஸ்கருடு குருடே பருஸ வேதி

என்றார். மற்றோரிடத்திலும் த்யாகராஜர்

கறகை நஷ்ரு த்ரோக கஹநமுநு கோட்ட ஸத்
குரு லேக யெடு வம்டி குணிகி தெலியக போது

என்பதனால் எண்ணிறந்த சன்மங்களில் செய்த வினையின் வலியால் அடர்ந்து வளர்ந்திருக்கிற மனோவியாதியாகிய காட்டை வெட்டியொழிப்பதற்கு ஸத்குருவென்னும் கோடாலி வேண்டுமென்றார்.

இத்யாதி காரணங்களால் எப்படிப்பட்ட யோக்யதையுடையவனும் ஆசிரியனில்லாமல் கிருதார்த்தனாகமாட்டான். த்யாகராஜர் "குரு லேக எடுவம்டி குணிகி தெலியகபோது" என்றார். ஆகவே, ஆசிரியன் அவஸ்யமிருக்கவேண்டும்.

## "குருவை யடையும் வழி"

நமக்கு எக்காலத்தில் குருநாதன் கிடைப்பான்; எப்பொழுது தரிசிப்போம்; அவருடைய ஆக்கினையை என்று நாம் செய்வோம் என, கோடைகாலத்து பயிரானது மழையை எதிர்நோக்குவதுபோல் நாம் குருநாதனுடைய தரிசனத்துக்காக வருந்தி எதிர்பார்க்க

* ஒரு கொடி.



வேண்டும். ஒருவன் சமுத்திரத்தில் இடறிவிழுந்துவிட்டால், கரை சேருவதற்கு எவ்வளவு துரிதமாகத் தெப்பத்தைப் பிடிப்பதற்குத் தாவுவானோ அதுபோல் நாம் இறப்புப் பிறப்பாகிய அலைகள் நிரம்பிய சமுசாரமென்கிற சமுத்திரத்தில் விழுந்துகிடக்கின்ற நாம் மோக்ஷமென்னும் கரை சேர்ப்பிக்கிற தெப்பமாகிய குருநாதனை அடைவதற்கு விரைந்து முயற்சிசெய்யவேண்டும். பிறவிக்குருடனானவன் தன் கோடைக்காலத்தின் நடுப்பகலிலே நீர் தேடித்திரியுமாறுபோலவும் நாம் மிகவும் வருந்தி குருநாதனைத் தேடவேண்டும்.

நெருப்புவழி நடப்பி னீர்தேடு வார்போற்
கருப்பிலனந் தேடுங் கதைபோல்—விருப்புற்றுப்
பக்குவத்து நாயகனைத் தேடுகின்ற பைந்தொடிபோற்
சற்குருவைத் தேடுந் தரம்,

—வள்ளலார்.

பக்குவம் வந்த சமயத்தில் இருவினையொப்பு மலபரிபாகம் உண்டாகச் சத்திநிபாதம் விளைந்த வழி மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல் தனிமயிலேறும் இராவுத்தனாகிய ஆண்டவன் மானிடச் சட்டை சாத்திக்கொண்டு ஆசிரியமூர்த்தமாக எழுந்தருளுவான்.

இதனைக் கீழ்வரும் ஆன்றோர் வாக்கியத்தாற் கவனிக்க:

தாயுமானார்:

அடிமைக்கா வளர்த்தெடுத்த வன்னைபோல
நீதி பெறுங் குருவாகி எனவும்,

பதிபசுபாசவிளக்கம்:

மருவி யுடல் வெறுப்பும் வந்தா
லிருவினை யொப்புமங்க ணெய்திடு மெய்துங்காலம்
கருமல பாகமுண்டாம் பாகந்தான் கடிதிற்சேரும்
திருவருட் சத்திபாதஞ் செறிந்திடுங் குருவுமன்றே, எனவும்,

சிவானுபூதிவிளக்கம்:

பருவங் குறித்துப் பாவொளி வந்திங்
குருவந்தரித்தாலொரு தவங்கள் வேண்டுமோ
செய்தற்கரிய தவஞ்செய்தற் பின்னல்லவோ
வெய்தற் கரியபிரா னெம்போல வந்ததுவே எனவும்,

சிற்றம்பலநாடி தாலாட்டு:

கண்ணொரு மூன்றுங் கரந்தார மைம்முகமு
மண்ணவர்க்குக் காணா வகையொளித்து வந்தானே
எங்கேங்கந் தானாகி யென்போ லுருக்கொண்டு
மங்கும் பிறவிதனை மாற்றவந்த வள்ளலோ எனவும்,

திருவாசகம் :

அருபரத்தொருவன் அவனியில் வந்து
குருபரனாகிய அருளிய பெருமையை சிறுமையென்றிகழாது
எனவும்,

திருவருட்பயன்:

பார்வையென மாக்களை முன்பற்றிப் பிடித்தற்காம்
போர்வையென காணார் புவி எனவும,

போற்றிப்பஃறொடை :

பூவலயந் தன்னின்று நீங்காச்சக லர்க்கவர்போல்
முன்னின்று மும்மலம் தீர்த் தாட்கொள்கை எனவும்,

சிவப்பிரகாசம்:

. . . முன்னம் ஈட்டிய தவத்தினாலே இறை அருளுருவாய்வந்து
கூட்டிடுமிவற்றை நீக்கிக் குரைகழல் குறுதமாபே எனவும்,

சித்தியார்:

. . . துன்னிய ஐம்புலவேடர் சூழலிற்பட்டுத் துணைவனையும்
அறியாது துயருறும் தொல்லுயிரை மன்னும் அருட்குருவாகிவந்(து)
அவரின் நீக்கி மலம் அகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பான்

எனவும் வருவனவற்றாற்காண்க,

இதற்கு நமது ஸ்ரீ அருணகிரிநாதஸ்வாமிகள் நோய்வாய்ப்பட்ட சமயத்தில் உலகத்தை வெறுத்து உயிரைத் துறப்பதற்காக (அருணையில்) கோபுரத்தின்மேலேறி ஒருவன் உண்டேல் என்னைக்காக்க, இல்லையேல் உயிர் துறக்க என்று விழுந்தகாலத்தில் அக்கணமே ஆறுமுகப்பெருமான் குருவடிவாக எழுந்தருளியதே சான்று.

(தொடரும்.)

---

## யக்ஷப்பிரஸ்னை.

வினா :—க்ஷத்திரியர்களுக்கு தேவதன்மை எது ?

விடை :—பாணங்களும் அஸ்திரங்களும் தேவதன்மை.

வினா :—ஸத்துக்களுக்குபோல இவர்களுக்கு தர்மம் எது ?

விடை :—ஸத்துக்களுக்குபோல இவர்களுக்கு யக்ஞமானது தர்மம்.

வினா :—இவர்களுக்கு மானிடத்தன்மை எது ?

விடை :—இவர்களுக்கு பயமானது மானிடத்தன்மை.

வினா :—அஸத்துக்களுக்குபோல இவர்களுக்கு அதர்மம் எது ?

விடை :—அஸத்துக்களுக்குபோல இவர்களுக்குத் துன்பமுற்றவர்களைக் கைவிடுதல் அதர்மம்.

---

ஓம் குஹாய நம :

# திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

| மலர். 2<br>Vol. 2 | ஈஸ்வர ௵ ஆடி ௴ 1௨<br>ஜுலை—1937 | இதழ் 4<br>No. 4 |
| --- | --- | --- |

## திருப்புகழ்.

### திருச்செந்தூர்.

அந்தகன் வருந்தினம் பிறகிடச்
சந்ததமும் வந்துகண் டரிவையர்க்
கன்புருகு சங்கதந் தவிரமுக் குணமாள
அந்திபக லென்றிரண் டையுமொழித்
திந்திரிய சஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடிச்
செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வறக்
கந்தனை யறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெரு குந்தடந் தெளிதரத் தணியாத
சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர என்றுநின் தெரிசனைப் படுவேனோ

கொந்தவிழ் சரண் சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம்புயம் பெற அரக் கருமாளக்
குன்றிடிய அம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டல மசைந்திளங் குழைகளிற் ப்ரபைவீசத்
தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் திருவான
சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருஞ்செழுந் தளர்நடைச்
சந்ததி சகந் தொழுஞ் சரவணப் பெருமாளே.

## பதவுரை.

*கொந்து அவிழ்சரண் - பூங்கொத்துகள் மலர்ந்துள்ள தேவரீரது திருவடிகளே, சரண் சரண்என - அடைக்கலம் அடைக்கலம் என்று சொல்லி அபையம் புகுந்து, கும்பிடு புரந்தரன் - வணக்கம் புரிந்த இந்திரன், பதிபெற - தனது பொன்னுலகத்தைப்பெற்று இன்புற வும், குஞ்சரி குயம் புயம் பெற . தேவயானையால் வளர்க்கப்பட்ட தேவயானையம்மையாரது தனங்கள் தேவரீரது புயாசலங்களைப்பெற வும், அரக்கர் (உம்-அசை) மாள - இராக்கதர்கள் அழிவெய்தவும், குன்று இடிய - கிரௌஞ்சமலை தூள்பட்டு இடியவும், அம் பொனின் திருவரை கிண்கிணி - அழகியதும் பொன்னலாகியதுமாகிய திருவரை யிலுள்ள சதங்கையானது, கிணின் கிணின் கிணின் என - கிணின் கிணின் என்று இனிமையாகச் சப்திக்கவும், இளம் குழைகளில் - இள மையான செவிகளில், குண்டலம் அசைந்து பிரபைவீச - குண்டல மாகிய காதணிகள் மெல்ல அசைந்து ஒளிசெய்யவும், செம் சிறு சதங்கை - பாதத்தில் அணிந்துள்ள அழகிய சிறு சதங்கைகள், தந்தனம் தனம் தனம் தன என கொஞ்சிட - தந்தனம் தனம் தனம் தன என்று மிகுந்த இனிமையாகக் கொஞ்சி ஓசையைச்செய்யவும், மணித்தண்டைகள் - இரத்னமணிகளால் செய்துள்ள தண்டைகளா னது, கலின் கலின் கலின் என - கலின் கலின் கலின் என்று ஒலிக்க வும். திருவான - சர்வ மங்களங்களுக்கும் உறைவிடமான மகாலட் சுமியாகிய, சங்கரி - சுகத்தைக் கொடுப்பவளாகிய பார்வதியம்மையார்,*



*மனங் குழைந்து - அன்பின் மிகுதியால் மனங்குழைந்து, உருக முத் தந்தா-உள்ளம் உருகி முத்தங்கொடுக்கவும், வரும் செழுந்தளர்நடை-மெல்ல அசைந்து அசைந்து வருகின்ற அழகிய தளர்நடையுடைய, சந்ததி - இளங்குமரனே, சகம் தொழும் - உலகமெல்லாம் கைகூப்பி வந்தனம் புரிகின்ற, சரவண - சரவண தடாகத்தில் உய்யும்பொருட்டு வெளிப்பட்ட, பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே, அந்தகன் வரும் தினம் பிறகிட - அடியேனுடைய உயிரைப்பற்ற கூற்றுவன் வருகின்ற நாளில் புறங்கொடுத்து ஓடவும், சந்ததமும் வந்து கண்டு - சதாகாலமும் விலைமகளிர் வீதியில்வந்து அவர்களதுஅழகைப் பார்த்து, அரிவையர்க்கு - அந்த பொதுமாதர்களிடத்திலே, அன்பு உருகு - அன்பு வைத்து மனம் உருகுகின்ற, சங்கதம் தவிர - நட்பா னது நீங்கவும், முக்குணம் மாள - சத்துவம் இராசசம் தாமசம் என்ற மூன்று குணங்களும் மாண்டுபோகவும், அந்திபகல் என்ற இரண்டை யும் ஒழித்து - மறப்பு நினைப்பு (கேவல சகலம்) என்கிற இரண்டு அவஸ்தைகளையும் அடியோடு ஒழித்து, இந்திரிய சஞ்சலங்களை அறுத்து - மெய் வாய் கண் நாசி செவி என்ற ஐம்புலன்களால் உண் டாகிற துன்பங்களை அடியோடு நீக்கி, அம்புய பதங்களின் பெரு மையை கவிபாடி - தாமரை மலரையொத்த தேவரீரது திருவடிகளின் பெருமைகளை அமைத்து பாமாலைகளைப்பாடி, செந்திலை உணர்ந்து உணர்ந்து உணர்வு உற - திருச்செந்திலம்பதியில் தேவரீர் எழுந்தருளி யிருக்கின்ற தத்துவத்தையும் செந்திற்பதியின் உட்கருத்துக்களையும் ஓங்காரவடிவாக ஆலயம் அமைந்திருக்கின்ற திறத்தையும் மெய்யறி வால் உணர்ந்து அம்மெய்யறிவு நிறைவடையவும், கந்தனை அறிந்து அறிந்து - கந்தனாகிய நினது சொரூபலக்ஷணத்தையும் தடஸ்த லட்ச ணத்தையும் அறிந்து, அறிவினில் சென்று செருகும் தடம் தெளிதர-அந்த அறிவின் வழியிலே சென்று உண்மைப்பொருளைச் சேருகின்ற முத்திநெறி இன்னதென்று தெளிவடையவும், தணியாத சிந்தையும் அவிழ்ந்து அவிழ்ந்து-சாந்தியையடையாத (கல்போன்ற) மனமானது நெகிழுந் தன்மையையடைந்து, உரையொழித்து - சொல்லற நின்று, என் செயல் அழிந்து அழிந்து அழிய - என்செயலால் எல்லாம் நடை பெறுகிறதென்ற தற்போதமானது அடியோடு அழியவும், மெய் சிந்தை வர - உண்மையறிவானது உண்டாகவும், என்று - எந்த நாளில், நின் தெரிசனைப்படுவேனோ - தேவரீரது திவ்ய தெரிசனம் அடியேன் கிடைக்கப்பெறுவேனோ ?*

## பொழிப்புரை.

பூங்கொத்துகள் மலர்கின்ற தேவரீரது திருவடியில் அடைக்கலம் அடைக்கலம் என்று கூறி அபயம் புகுந்து வணங்கிய தேவேந்திரன் தனது பொன்னுலகத்தைப் பெற்று இன்பத்தை யடையவும், ஐராவதத்தால் வளர்க்கப்பெற்ற தேவயானையம்மையாரது தனங்கள் நினது புயாசலங்களைப் பெறவும், அரக்கர்கள் மாளவும், கிரௌஞ்ச வெற்பு தூள்பட்டு இடியவும், அழகியதும் பொன்னாலாகியதுமாகிய நினது திருவரையிற் கட்டியுள்ள சதங்கைகள் கிணின் கிணின் கிணின் என்று இனிய ஒலியைச் செய்யவும், இளஞ் செவிகளில் குண்டலங்கள் மெல்ல அசைந்து ஒளி வீசவும், திருவடியில் அணிந்துள்ள அழகிய சிறு சதங்கைகள் தந்தனம் தனம் தனம் தன என்று இனிமையாகக் கொஞ்சி சப்திக்கவும், இரத்னமணிகளாலாகிய தண்டைகள் கலின் கலின் கலின் என்று ஒலிக்கவும், சர்வமங்களங்களுக்கும் உறைவிடமானவரும், சுகத்தைக் கொடுப்பவருமாகிய உமாதேவியார் அன்பின்மிகுதியால் மனமானது குழைந்து உருகி முத்தங் கொடுக்கவும் மெல்ல வருகின்ற அழகிய (இளம்பருவத்தின்) தளர் நடையுடைய புதல்வரே! உலகெலாம் வழிபட்டு வணங்குகின்ற சரவணோற்பவரே! பெருமையிற் சிறந்தவரே! அடியேனது ஆவியைப்பற்றுவதற்காக இயமன் வருகின்றநாளில் பிறகிட்டு ஓடவும், தினந்தோறும் பொதுமகளிர் இடத்திற்சென்று அவர்களது புற அழகைக்கண்டு அதில் ஈடுபட்டு அன்புகொண்டு மனம் உருகி அவர்களிடத்திற் பொருந்துகின்ற சினேகமானது நீங்கவும், சத்துவம் இராசசம் தாமசம் என்ற முக்குணங்களும் இறந்துபடவும், தாம் எழுந்தருளியுள்ள திருச்செந்தூரின் தத்துவத்தையும் அது கடற் கரையில் அமைந்திருப்பதன் காரணத்தையும் பிரணவாகாரமாக ஆங்கு ஆலயம் அமைந்திருக்கின்ற நிலையையும் உணர்ந்து மெய்யுணர்வையடையவும், கந்தனாகிய தேவரீரை உள்ளபடி அறிந்து அறிவு மார்க்கத்தில் சென்று உண்மைப் பொருளைச் சேருகின்ற முத்திநெறி இதுவே என்று தெளிவுறவும், தணிதலையடையாத எனது மனமாகிய கல்லானது உருகி நெகிழ்ச்சியடைந்து உரையற்று என்செயலால் எல்லாம் நிகழுகிறதென்ற தற்போதம் அறவே அழிந்து உண்மை ஞானம் வாவுந் தேவரீரது அருள்வடிவின் திவ்ய தெரிசனையை அடியேன் என்று பெறுவேன்?



## விரிவுரை.

**அந்தகன் வருந்தினம் பிறகிட :—**

குமாரக்கடவுளது தெரிசனைப்பட்டவர்களைக் கண்டால் இயமன் பிறகிட்டு ஓடுவன். இதனை

"மறலிபடை யமபுரமு மீதோட வேபொருது
விருதுபல முறைமுறையி லேயூதி வாதுசெய்து
மதலையொரு குதலையடி நாயேனையாள இவண்
வந்திடாயோ"

குமரா சரண சரணமென் றண்டர் குழாந் துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுகம் ஆறுங் கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென் செயுமே

என்ற திருப்புகழ் கந்தரலங்காரத் திருவாக்குகளால் தெளிக.

இயமன் தனது தூதுவர்களைப்பார்த்து சிவமூர்த்தியை நினைந்து வணங்கி "தூதர்களே! சிவபெருமானுடைய அடியார்களைக்கண்டால் நீங்கள் பயபக்தியுடன் வணங்கி எவ்வளவு தூரமாகச் செல்லமுடியுமோ அவ்வளவுதூரம் அகன்று செல்லுங்கள்" என்று கூறுகின்றனன். மார்க்கண்டேயரைப் பற்றச்சென்று உதையுண்டதை மறப்பனோ?

தொழுது நமனுந்தன் தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில் காளத்தி மன்னன்—பழுதிலாப்
பத்தர்களைக் கண்டாற் பணிந்தகலப் போமின்கண்
எத்தனையுஞ் சேய்த்தாக என்று

189471.

**சந்ததமும் வந்து . . . . . . . சங்கதந்தவிர :—**

தினந்தோறும் பெண்களுடைய அழகைக்கண்டு மனமுருகி அவர்களது நட்பில் ஈடுபடுகின்ற அவத்தொழிலை யறவே ஒழிக்க வேண்டும் இதனாலன்றோ இராமலிங்க அடிகள் "மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்" என்று தேற்றேகாரத்தால் இறைவனைக் குறையிரந்தனர்.

**முக்குணம் மாள :—**

இறைவனுடைய அருட்குணத்தில் திளைத்து சிவயோகத்தில் வீற்றிருப்பார்க்கு முக்குணமும் நாசமடையும்.

" நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந்தேன் இறந்தே விட்ட திவ்வுடம்பே "

— அலங்காரம்.

அந்தி பகல் என்றிரண்டையு மொழித்து :—

*அந்தி:—மறப்பு, பகல்:—நினைப்பு, (கேவல சகலம்) நினைப்பும் மறப்பும் அற்றார்க்கே இறைவனது தெரிசனம் உண்டாகும். நினைப்பு மறப்பு நீங்கப்பெறுதல் அவசியம். இதனை அருணகிரிநாதர் பல விடத்துக்கூறியுள்ளார்.*

" அந்திபகலற்ற நினைவு அருள்வாயே "

" இதமகிதம் விட்டுருகி இரவுபகலற்ற விடம்
மனதென விருக்கைபுரி யோகப் புராதனனும் "

" பரமானந்தத்தே தேங்கார் நினைப்பு மறப்பு மறார் "

" இராப்பகலற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே "

" கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய் "

*பிற ஆன்றோர்கள் வாக்குகளையும் நோக்குக:*

" நினைப்பு மறப்பு மிலாதவர் நெஞ்சம்
வினைப்பற் றறுக்கும் விமல னிருக்கும் "

—திருமந்திரம்.

" இரவுபக லில்லா இன்ப வெளியூடே
விரவி விரவிநின் றுந்தீபற "

—திருவுந்தியார்.

" கங்குல்பக லறநின்ற எல்லையுள தெது "

—தாயுமானார்.

இந்திரிய சஞ்சலங்களையறுத்து :—

*நினைப்பு மறப்பும் அற்றவர்க்குப் புலன்களாலுண்டாகும் துன்பங்கள் தானே நீங்கும். தூங்கியோன் கைப்பொருள் தானே வீழ்வதுபோல் என்றுணர்க.*

" இந்த்ரிய தாப சபல மறவந்து நின்கழல் பெறுவேனோ "

—(ஓலமறைகள்) திருப்புகழ்.

அம்புயப் பதங்களின் பெருமையைக் கவிபாடி :—

*இறைவனுடைய திருவடிக்கமலங்களின் பெருமையை அமைத்துக் கவிபாடுதல் நினைப்பும் மறப்பும் நீங்குதற்கு சாதனமாம். அத்*



*திருவடியின் பெருமையை அருணகிரியார் அநேகவிடத்திற் கூறியுள்ளார்.*

" ஆலமுண்டகோன் அகண்டலோக முண்டமால் விரிஞ்சன்
ஆரணங்கள் ஆகமங்கள் புகழ்தாள் "

—(தோலெலும்பு) திருப்புகழ்.

" வீடுஞ் சுரர் மாமுடி வேதமும் வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே "

" வேதாமுதல் விண்ணவர் சூடுமலர்ப் பாதா "

—அநுபூதி.

செந்திலை யுணர்ந்து உணர்ந்து :—

*அலைகள் வந்து ஓய்வடைகின்ற இடமாதலால் செந்திலுக்கு அலைவாய் என்று மற்றொரு பேருமுண்டு. நினைப்பு மறப்புகளாகிய அலைகள் வலியற்று அவனது திருவடியில் வந்து ஒடுங்க கடற்கரையில் எம்பெருமான் உறைகின்றனன். " பிறவிக்கடலில் வீழ்ந்தோரை எனது திருவடியாகிய ஓடத்தால் முத்திக்கரைசேர்ப்பதற்காகக் கடற்கரையில் யான் வசிக்கின்றனன் " என்ற குறிப்பைக்காட்டுதற்காகவே முருகன் திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ளான்.*

" யாதுநிலை யற்றலையும் எழுபிறவிக்கடலை
ஏறவிடுநற் கருணை ஓடக்காரனும் "

—வகுப்பு.

" சுவர்க்கலோக மீகாம சமஸ்தலோக பூபால
தொடுத்தநீப வேல்வீர வயலூரா "

—(அனித்த) திருப்புகழ்.

*தூண்டுகை விநாயகர் ஆலயத்திலிருந்து புறப்பட்டு ஆனந்த விலாசஞ்சென்று வதனாரம்ப தீர்த்தஞ் சென்று ஷண்முகவிலாசத்தின் வழியே சென்று சுவாமிதரிசனஞ் செய்துத் திரும்பினால் பிரணவாகாரமாக அமைந்திருக்குந் தன்மை கண்கூடு. முருகதலங்களுள் செந்திலம்பதி தலைசிறந்தது. சுவாதிஷ்டான க்ஷேத்திரம், அளக்கற்கரும் பெருமையுடைத்து. இத் தெய்வீக தலத்தை அருணகிரியார் பிறபாடல்களில் கூறியவாறுங் காண்க.*

" செந்திலென் றவிழவுள முருகிவரும் அன்பிலன் "

"சங்கங் கஞ்சங் கயல் சூழ்தட
மெங்கெங்கும் போங்க மகாபுநி
தந்தங்குஞ் செந்திலில் வாழ்வுபர் பெருமாளே"

"கயிலைமலையனைய செந்திற் பதிவாழ்வே"

"திருச்செந்திலை யுரைத்துய்ந்திட அறியாரே"

கந்தனையறிந்து அறிந்து :—

கந்தப்பெருமானுடைய சொரூபலட்சணத்தையும், தடஸ்த லட்சணத்தையும் அறிந்து

அறிவினிற் சென்று :—

ஞானமார்க்கத்திற் செல்லுதல் வேண்டும். அங்ஙனம் சென்றால் உண்மைப் பொருளை நிச்சயமாக அடையலாம். தணியாத சிந்தை அப்போதுதான் சாந்தியை யடைந்து நெகிழும். சொல்லற்ற நிருவிகற்ப சமாதி கைகூடும்.

என் செயல் அழிந்து :—

எல்லாம் சிவன் செயலென உணர்ந்து, தன் செயலால் நடைபெறுகிறதென்ற தற்போதத்தை அறவே யொழித்து தன்வசமற்று பாவசமுற்றுறைதல் வேண்டும்.

நஞ்செய லற்றிந்த நாமற்றபின் னாதன்
தன்செயல் தானே யென் றுந்தீபற
தன்னையே தந்தா னென் றுந்தீபற
— திருவுந்தியார்.

தெரிசனை படுவேனோ ?

முருகப்பெருமானுடைய தெரிசனையுண்டாயின் அந்தகன் பிறகிடுதலும், அரிவையர்க்கு அன்புருகு சங்கதந் தவிர்தலும், முக்குணமொழிதலும், அந்திபக லழிதலும், இந்திரிய சஞ்சலங்களறுதலும், அம்புயப்பதங்களின் பெருமையைக் கவிபாடுதலும், செந்திலையுணர்தலும், கந்தனையறிதலும், அறிவினிற்சென்று தெளிதலும், தணியாத சிந்தை யவிழ்தலும், உரை யொழிதலும், தன்செயலழிதலும் மெய்ச்சிந்தை யடைதலும் உண்டாகும்.

சரண் சரண் சரணெனக் கும்பிடு புரந்தரன் பதிபெற :—

சிவ பெருமான்பால் வரம் பெற்றுத் தருக்கிய சூரபன்மனுடைய கொடுமைக்கு அஞ்சி இந்திரன் பத்தினியுடன் மேருகிரியின்ஓர்சார்



முழைக்குள் ஒளிந்திருந்தனன். அக்கால் சூரபன்மன் பானுகோபனை ஏவி இந்திரலோகத்தை தீவாய்ப்படுத்தி இந்திரன் மகனாகிய சயந்தனையும் தேவர்களையும் தேவமாதர்களையும் சிறைப்படுத்தினன். இந்திரன் தனது உலகத்தையும் மகனையும் இழந்து பல யுகங்களாக வருந்தி இனி உய்வுபெறுங்காலமு முண்டோ ? என ஏங்கி சிறகற்ற பறவைபோல் தளர்ந்த மனமுடையவனாய் எந்தை கந்தவேளிடமெய்தி "அமரர் பயந்தவிர்க்குங் குமரநாயக ! மூவர் முதல்முதல்வ ! வேற்படை விமல ! நின் திருவடியே சரணம்; உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன் ; புகலிடம் வேறில்லை ; தஞ்சம் தஞ்சம் ; எளியேனைக் காத்தல் நின்கடன்" என்று கதறி முறையிட்டனன். வேண்டுவார் வினைப்பகையறுத்து வேண்டிய போகங்களை நல்கும் வேலாயுதக்கடவுள் சூராதியவுணர்களைச் செற்று, இந்திரன் மகனையும் தேவமாதர்களையும் சிறைமீட்டு இந்திரனுக்குப் பொன்னுலகளித்துப் பொன்று வாழ்வில் இருத்தினர்.

"வாலகுமர குக கந்த குன்றெறி
வேல மயில என வந்து கும்பிடு
வான விபுதர்பதி யிந்திரன் வெந்துயர் களைவோனே"
—(ஓலமறை) திருப்புகழ்.

திருவரைக்கிண்கிணி கிணின் கிணின் என :—

என்றுமகலாத இளமைக்காரனாகிய குழந்தைவேலனது இடையிலணிந்துள்ள சதங்கையின் ஓசை பதினாலுலகங்களுங் கேட்டன. அதன் இன்னோசையால் உலகங்களெல்லாம் மகிழ்ந்தன. இதனை அருணகிரிநாதர் உரைக்குமாறு-காண்க.

மண்கம ழுந்தித் திருமால் வலம்புரி யோசை யந்த
விண்கமழ் சோலையும் வாவியுங் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையிற்
கிண்கிணி யோசை பதினாலுலகமுங் கேட்டதுவே.

மணித் தண்டைகள் கலின் கலின் கலினென :—

இணையற்ற வீரர்களது பாதத்தில் வீரகண்டாமணி கட்டுவது மரபு. முருகவேள் அதிபராக்ரம வீரராதலால் இரத்தின மணிகள் பதித்த வீரகண்டாமணிகளும் தண்டைகளும் அவருடைத் திருவடிகளில் மிளிர்கின்றன.

"அணிமணித்தண்டையார்க்கும்
செழுமலரடியுங் கண்டான் அவன்தவம் செப்பற்பாற்றோ"
—கந்த புராணம்.

" கழலொலிதண்டையுங் காலு மொக்கவந்து
வரமெனக் கருள்கூர்வாய் "

" இனியநாத சிலம்பு புலம்பிட
அருண ஆடக கிண்கிணி தங்கிய அடிசேராய் "

" இசைத்திடுஞ் சந்தபேத
மொலித்திடுந் தண்டை சூழும்
இணைப்பதம் புண்டரீகம் அருள்வாயே "

—திருப்புகழ்.

**சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே :—**

மொழியுஞ் சமயமனைத்துக்கும் முதல்வனுனபடியால் முருகப் பெருமானை உலகமெலாம் வணங்குகின்றன. யாவர் எத்தெய்வத்தை வணங்கினும் அவ்வணக்கம் முருகனையே சாரும்.

"நவலோகமுங் கைதொழு நிசதேவலங்கிருத
நலமான விஞ்சைகரு விளைகோவே "

—(சிவனூர்) திருப்புகழ்.

## கருத்துரை.

சகமெல்லாம் தொழுகின்ற சரவணபவரே ! பெருமையிற் சிறந்தவரே ! கூற்றுவன் பிறகிட்டு ஓடவும், பொதுமகளிர் சினேகம் நீங்கவும், முக்குணங்கள் ஒழியவும், செந்திலம்பதியின் தத்துவத்தையுணர்ந்து மெய்ஞ்ஞானத்தை யடையவும், தேவரீரை யுள்ளபடியறிந்து, மூத்திநெறி இதுவே என்று தெளிவுறவும், என்மனமாகிய கல்லானது உருகி தற்போதம் அழிந்து உண்மையான அறிவுவரவும் தங்கள் தெரிசனையை என்று அடியேன் பெறுவேன்.

---



ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

# ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது.)

(76-வது பக்கத் தொடர்ச்சி.)

रणद्धंसके मञ्जुलेऽत्यन्त शोणे
मनोहारि लावण्य पीयूषपूर्णे ।
मनःषट्पदो मे भवक्लिशे तप्तः
सदा मोदतां स्कन्दते पाद पद्मे ॥

(9) ரணத்[3]த[4]ம் ஸகே மஞ்ஜுலேத்யந்த சோணே
மனோஹாரிலாவண்ய பீயூஷ பூர்ணே ।
மன: ஷட்பதோ[3]மே ப[4]வக்லேச தப்த:
ஸதா[3] மோத[3]தாம் ஸ்கந்த[3] ! தே பாத[3] பத்[3]மே ॥

## அவதாரிகை.

முன் சுலோகங்களினால் சுவாமியின் வாஸஸ்தானமாகிய ஸமுத்திரக்கரை, பர்வதம், சுவாமிவீற்றிருக்கும் மஞ்சம் இவைகளே. அடியவர்களின் பிறவித்துன்பத்தைப் போக்கி பேரின்பத்தை யளிக்க வல்லனவென்பதால் இத்தகைய சிறப்புவாய்ந்த ஸ்தலத்தைத் தரிசிப்பதும், அங்கு அன்பர்களுக்கு அருள்செய்யவே எழுந்தருளியிருக்கும் கந்தக்கடவுளின் கழலிணையைப் பணிவதுமே மனிதயாக்கையின் பயனெனப் பெறப்பட்டது. அத்தகைய திருவடியை இச்சுலோகத்தில் அழகாக வர்ணிக்கின்றார்.

## பதவுரை.

ரணத்தம் ஸகே - ஒலிக்கின்ற அன்னப் பக்ஷிகளையுடையதும் (சப்திக்கின்ற பாதசரங்களையுடையதும்)
மஞ்சுலே - மிக அழகியதும்
அத்யந்த சோணே - மிகச் சிவந்ததும்
மனோஹாரிலாவண்ய பீயூஷ பூர்ணே – மனத்தைக் கவருகின்ற இனிய அமுர்தத்தால் நிறைந்ததும் (மனத்தைக் கவருகின்ற அழகாகிய அமுர்தத்தால் நிறைந்ததும் ஆன)
தே பாதபத்மே - உனது திருவடியாகிய தாமரைப்பூவின் கண்,
ஹே ஸ்கந்த! - ஓ கந்தப்பெருமானே,
பவக்லேச தப்த: - ஸம்ஸாரதாபத்தால் துன்பப்படுகின்ற,
மே மன: ஷட்பத: - என் மனதாகிய வண்டானது,
ஸதா - எப்போதும்,
மோததாம் - சந்தோஷத்தை யடையட்டும்,

## பொழிப்புரை.

பசியினாலும் தாகத்தினாலும் துன்புற்றிருக்கும் வண்டானது மது நிறைந்ததும் குளிர்ச்சி பொருந்தியதுமான தாமரைப்பூவை யடைந்து எவ்வாறு ஆனந்திக்குமோ அவ்வாறே சம்சாரதுக்கத்தால் துன்புற்றிருக்கும் என்மனது ஓ கந்தப்பெருமானே! தேவரீருடைய திருவடியை யடைந்து சந்தோஷத்தை யடையட்டும்.

सुवर्णाभदिव्यां बरोद्भासमानाम्
कणत्किङ्किणी मेखला शोभमानम् ।
लसत्देमपट्टेन विद्योतमानम्
कटिं भावये स्कन्दते दीप्यमानम् ॥

(10) ஸுவர்ணாப திவ்யாம் பரோத் பாஸமானம்
க்வணத் கிங்கிணீ மேகலா சோப மானம் ।
லஸத்தேம பட்டேன வித்யோத மானம்
கடிம் பாவயே ஸ்கந்த! தே தீப்யமானம் ॥



## பதவுரை.

ஹே ஸ்கந்த! - ஓ கந்தப்பெருமானே,
ஸுவர்ணாப திவ்யாம் பரோத் பாஸமானம் - பொன்போல் பிரகாசிக்கின்ற உயர்ந்த பீதாம்பரத்தை யுடையதும்,
க்வணத் கிங்கிணீ மேகலாசோபமானம் - ஒலிக்கின்ற ஒட்டியாணத்தினால் சோபிக்கிறதும்,
லஸத்தேம பட்டேன வித்யோதமானம் - அழகிய தங்கப்பட்டத்தால் பிரகாசியாநின்றதும்,
தீப்யமானம் - இயற்கையாகவே ஒளிர்கின்றதுமான,
தே - தேவரீருடைய,
கடிம் - இடையை,
பாவயே - தியானிக்கின்றேன்.

## பொழிப்புரை.

திவ்வியமான பீதாம்பரம், ஒட்டியாணம், தங்கப்பட்டை இவைகளால் அலங்கரிக்கப்பெற்றதும், இயற்கையாகவே ஒளிர்கின்றதுமான தேவரீரது இடையை தியானிக்கின்றேன். இதனால் தேஜோரூபமாக இருக்கும் இடையை தியானிப்பவர்கள் தேஜோரூபிகளாக ஆவார்கள் என்னும் உண்மையும் உணர்த்தப்பட்டது.

पुलिन्देशकन्या धनाभोगतुङ्ग
स्तनालिङ्गनासक्त कास्मीररागम् ।
नमस्याम्यहम् तारकारे तवोरः
स्वभक्तावने सर्वदा सानुरागम् ॥

(11) புலிந்தேச கன்யா கனா போக துங்க
ஸ்தனா லிங்க னாஸக்த காஸ்மீர ராகம் ।
நமஸ்யாம் யஹம் தாரகாரே! த வோர:
ஸ்வ பக்தாவனே ஸர்வதா ஸானு ராகம் ॥

## பதவுரை.

ஹே தார காரே - தாரகாசுரனைச் சங்கரித்தவரே,

புலிந்தேச கன்யா கனாபோகதுங்கஸ்தனாலிங்கனாஸக்தகாஸ்மீரராகம் - வேடராஜாவின் பெண்ணாகிய வள்ளியம்மையின் பருத்த தனங்களைத் தழுவியதனால் ஒட்டிக்கொண்ட குங்குமச் சாயத்தையுடையதும்,

ஸர்வதா - எப்போதும்,

ஸ்வபக்தாவனே - தனது பக்தர்களைக் காப்பாற்றுவதில்,

ஸாநுராகம் - பற்றுடையதுமாகிய,

தவ - தேவரீருடைய.

உர: - மார்பை,

அஹம் - நான்,

நமஸ்யாமி - நமஸ்கரிக்கிறேன்.

## பொழிப்புரை.

வள்ளியம்மையின் ஸ்தனங்களினின்றும் ஒட்டிக்கொண்ட குங்குமச்சாயத்தை யுடையதும் தனது அடியவர்களைக் காத்துக் கொள்வதில் பற்றுடையதுமாகிய தேவரீருடைய மார்பை தியானிக்கின்றேன். இதனால் கந்தக்கடவுளானவர் அடியவர்கள் எத்தகைய குற்றம் புரிந்தாலும் பொறுத்து ரட்சிக்கும் கருணைக்கடலென்பது பெறப்பட்டது.

(தொடரும்.)

---

# வினா விடை மணிகள்.

### ஆதி சங்கரர்.

கே:—தானம் என்பது எது?

ப:—கேட்காது கொடுத்தல்.

கே:—சிநேகிதன் யார்?

ப:—பாவஞ் செய்யாது தடுப்பவன்

கே:—அழகு எது?

ப:—சீலம்.

கே:—வாக்கிற்கு அழகு எது?

ப:—சத்யம்.

உ

ஓம் குஹாய நம:

# கந்தர் திருவிளையாடல்

(83-ம் பக்கத் தொடர்ச்சி.)

பங்கயாசனன் இவைகளைக்கூற ஐங்கணைக் கிழவனும் மன்மதன் உள்ளம் வருந்தி, ஆதிநாயகராம் அரனாரிடம் மாறுகொண்டு எதிர்த்துப் போர்புரியேன்? இஃதன்றி வேறு எக்கருமத்தைக் கட்டளையிடினும் இமைப்பொழுதில் செய்வேன்" என்றனன். பிரமன் அதுகேட்டு வெகுண்டு "அறிவிலியே! என்னுடைய இன்னுரைகளை மறுத்தனை; நானுரைத்தவண்ணம் புரிவையேல் பிழைப்பாய்; இன்றேல் உனக்கு சாபந்தருவேன்; இவ்விரண்டில் எது நினக்கு உடன்பாடு? ஆராய்ந்து கூறுதி" என்றனன். மன்மதன் இவ்வசனங்களைச் செவிமடுத்து மனங்கவன்று பெருமூச்செறிந்து "இனி நாம் செயத்தக்கது யாது?" என்று சிந்தித்து, ஒருவாறு தெளிந்து மலரவன் மாமுகம் நோக்கி வகுக்கலாயினன். "நாமகள் நாயக! சிவமூர்த்தியிடம் எதிர்த்துச் செல்லுவனேல் அப்பரமனது நுதல்விழியால் மாள்வேன்; இன்றேல் நினது சாபத்தால் அழிவேன்; இவ்விரண்டில் எது தக்கது என்னில், சிவமூர்த்தியினது நெற்றிக்கண்ணால் அழிந்தால் பின்னர் ஒருகாலத்தில் உய்வேன்; நினது சாபத்தாலழியில் அவ்வுய்வு பெறுமாறில்லை; ஆதலால் யான் நின்னுரைப்படி செல்லுவேன்; சினம் கொள்ளற்க" என்றனன். உடனே பிரமன் மனமகிழ்ந்து "மதன! நன்று; நன்று; நின்னை மகாதேவரிடம் தனித்து அனுப்புவோமல்லம்; யாமும் நின்னைத் தொடர்ந்து வருவோம்; நீ செல்லுதி" என்று அன்புடன் அனுப்பினன்.

மதனன் மலரவன்பால் விடைபெற்று தன்னிருக்கை சென்று நிகழ்ந்தவற்றை தனது பத்தினியாகிய இரதியிடம் புகல, அவள் சிவமூர்த்தியிடம் செல்லுதல் தகாதெனமறுத்துரைக்க, மதனன் அவளைத் தேற்றி மலர்க்கணைகள் நிறைந்த அம்புக்கூட்டைப் புறத்தேகட்டி, கரும்புவில்லை எடுத்து குளிர்ந்த மாந்தளிராகிய வாளை இடையிற் சேர்த்து, குயில், சமுத்திரம் முதலியவைகள் முரசுவாத்தியங்களாய் முழங்க, மீனக்கொடியுடன் சேர்ந்ததும், கிளிகளைப்பூட்டியதும், சந்

திரனைக் குடையாகவுடையதுமாகிய தென்றல் தேரின்மேல் ஊர்ந்து இரதியுடன் புறப்பட்டு எம்பெருமான் வைகும் கயிலைமலையைக்கண்டு கரங்களைக்கூப்பி வணங்கி, தேரைவிட்டிறங்கி தன்னுடன் வந்த பரிசனத்தை அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு, இரதிதேவியுடன் வில்லும் அம்பும்கொண்டு பெரும்புலியை நித்திரையைவிட்டெழுப்ப ஒரு சிறு மான் செல்லுவதுபோல் கயிலைமேல் ஏறினன். கரும்புவில்லை வளைத்து மலர்க்கணைபூட்டி ஆங்குள்ள பறவைகள்மீதும், விலங்குகள் மீதும் காமவிச்சையுண்டாகுமாறு செலுத்தினன். கோபுரமுகப்பிலிருந்த நந்தியங்கடவுள் அதுகண்டு பெருஞ் சினங்கொண்டு இது மன்மதனுடைய செய்கையென்று தெளிந்து 'உம்' என்று ரீங்காரஞ் செய்தனர். அவ்வொலியைக்கேட்ட மன்மதனுடைய பாணங்கள் பறவைகள்மீதும் விலங்குகளின்மீதும் செல்லாது ஆகாயத்தில் நின்றன. அதனைக்கண்ட மதனன் நெடிதுயிர்த்து மனம்வருந்தி உளந் துளங்கி, நந்திதேவர் முன் சென்று பன்முறைவணங்கி வாழ்த்தி நின்றனன். நந்தியங்கடவுள் மதன! இத்திருமலைக்கண் நீ வந்த காரணம் யாது? என்ன, மதனன் "பிரமன் தனக்குக் கூறிவிடுத்த நிகழ்ச்சிகளை யுரைக்க, நந்திதேவர் "பிரமாதிதேவர்கள் தமக்குற்ற துன்பநீக்கத்தின்பொருட்டு இவனை இங்கு விடுத்துளார்கள்; சிவபெருமான் மோன நிலையில் அமருங்கால் "யார் வந்தாலும் உள்ளே விடவேண்டாம், மன்மதன் ஒருவனைமட்டும் விடுக்குதி" என்றருளினர். மந்திரசக்தியால் பசுவைத்தடிந்து வேள்விபுரிந்து மீளவும், அப்பசுவை எழுப்புதல்போல் மன்மதனை எரித்து, மலைமகளை மணந்து பின்னர் இவனை எழுப்புமாறு எம்பெருமான் நினைத்தான்போலும்" என்று நினைத்து "மாரனே! சிவமூர்த்தியின்பால் செல்லுதல் வேண்டுமோ?" என மன்மதன் "எந்தையே! என்னுயிர்க்கு இறுதி வரினும் பொன்னார்மேனிப் புரிசடையண்ணலிடம் சேருமாறு வந்தனன்; அவ்வெண்ணத்தை நிறைவேற்ற வேண்டும்' என்றனன். நந்திதேவர் "மலர்க்கணைக்கிழவ! தேவதேவன்முன் செல்லுதற்கு உன்னுதியேல் மேலைக்கோபுர வழியாகச் செல்லுதி" என்றனர் மன்மதன் அவரை வணங்கி விடைபெற்று. மேலைவாயிலின் உள்சென்று, சோதிமாமலைபோல் வீற்றிருக்கும் சூலபாணி முன் சென்றனன். ஒப்பற்ற சரபத்தைக்கண்ட சிங்கக்குட்டிபோல் வெருவுற்று உள் நடுங்கி மெய் வியர்த்து கரத்திற்பற்றிய படையுடன் அவசமுற்று வீழ்ந்தான்.



உடனே இரதிதேவி கரத்தாற்றுங்கி 'இறந்தனன் கொல்' என்று நெஞ்சங்கவன்று தேற்றினள். மதனன் அவசந்தெளிந் தெழுந்து "அந்தோ? அடியேன் என்னகாரியம் செய்யத் துணிந்தேன். நகையால் புரமூன்றுமெரித்த நம்பனை எதிர்த்துப்போர்புரியுமாறு பிரமதேவன் என்னை இங்கனுப்பினர். இன்றே எனக்கு அழிவு வந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை. எண்குணத்திறைவனும் ஈசனைக் கண்டவுடனே உள்ளம் வெருவி என்னுயிரை யிழந்தவன் போலாயினனே? இனி எதிர்த்துக் கணைகளைப்பொழிந்தால் உய்குவனோ? கணைகள்தான் இறைவனை வெற்றி பெறுமோ? இதனைத் தேவர்கள் அறிந்திலரே. பெருஞ் சண்டமாருதத்தின்முன் ஓர் சிறு தீபம் நிற்கவல்லதோ? அதுபோல் வாக்காலும் மனத்தாலும் அளக்க முடியாத வள்ளல்முன் என்னைத் தேவரனுப்பினர். இன்னும் சின்னேரத்தில் இப்பெருமானது நெற்றிக்கண் பார்வையால் வெந்தழியப் போகிறேன். சகலலோகங்களையும் இமைப்பொழுதில் நீறுசெய்யும் நிமலனைப் பூமலர்க்கணைகொண்டு போர்புரிய வந்தது நகைப்புக்கிடமன்றோ? விதியைச்கடக்கவல்லார் யார்? அயனாதியமரராலும் விதியை வெல்லமுடியாதல்லவா? இதனைக்கூர்ந்து நோக்கின் குன்றவில்லியின் செயலே போலும்? இக்கருமம் எவ்வாறுமுடியுமோ? இறைவன் திருவருள் எங்ஙனமோ அங்ஙனம் முடிக; இனி தாமதியாது எண்ணியதை முடிப்பன்" என்று பலவாறு நினைந்து கரும்புவில்லை வளைத்து சுரும்பு நாணேற்றி தண்மலர்க்கணைகளைப்பூட்டி, மதிநதிச்சடைப்பெருமான் முன்சென்று நின்றான்.

இது நிற்க, மனோவதி நகரத்தில் மலரவனை இந்திரன் இறைஞ்சி "எண்தோளிறைவன்பால் மதனனைத் தனித்தனுப்பினீர்; அவனுடைய போர்த்திறத்தைக் காணும்பொருட்டு நாமும் போவோம்" என்றனன். பிரமன் எழுந்து தேவர் குழாத்துடன் புறப்பட்டு கயிலைமலையையணுகி மன்மதனுடைய செயலைநோக்கி மழுக்கரத்தண்ணலை வழுத்திநின்றனன். மதனன் சிவபிரான்மேல் குறிபார்த்து ஐந்து மலர்க்கணைகளையும் விடுத்தனன். மதனால் விடப்பட்ட மலர்ப்பகழிகள் சிவபிரான்மேற் படுதலும் பரமேஸ்வரன் தனது நெற்றிக்கண்ணைச் சிறிது திறந்து மன்மதனை நோக்க, அவ்விழியினின்றுந்தோன்றிய சிறு தீப்பொறியானது மன்மதனது உடலை எரித்தது. அதனாலுண்டாகிய புகை கயிலைமலை முழுதும் சூழ்ந்தது.

விட்ட வெம் பகழி யைந்தும் வியத்தது விமலன்மீது
பட்டலுஞ் சிறிதே வேளைப் பார்த்தனன் பார்த்த லோடுஞ்
கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமற்
சுட்டது கைலை முற்றுஞ் சூழ்புகை பரவிற் றன்றே.

அரியயனாதி யமரர்கள் பாற்கடலைக் கடைந்தபோது ஆலகால விடந்தோன்றியதுபோல் புகையுந் தீயும் பரவலுற்றன. கீழ்க்கோபுர வாயிலில் காவல்பூண்டுள்ள நந்திதேவர் அதனைக்கண்டு, மதனன் மடிந்தான் என்று நினைந்து, அங்குள்ளார்களுக்கு உரைப்பார். அறிவின்மிக்கீர்! கண்ணுதற்கடவுள்முன் சென்ற மன்மதனைச் சிவபெருமானது நெற்றிக்கண் சுட்டதென்று நினையாதீர்கள்; அருட்பெருங் கடலாம் அரனை மலர்க்கணையால் மயக்குவனென்றெழுந்துவந்த மறச்செயலே அவனைச் சுட்டுவிட்டது; இனி தனது பதியிறந்த தன்மையைக்கண்டு இரதிதேவி அக்கினியில் வீழ்ந்த மலர்மாலைபோல் வாடி, கறைமிடற்றண்ணலைவேண்ட, நம் கருணையங்கடவுள் மன்மதனை மீளவும் எழுப்பித்தருகுவன்; இதனை நீவிர் காண்மின்" என்று கூறினர். இதனைக் கேட்டோர் உலகமுய்யும் பொருட்டாக காமனை எரித்த கருணாகரக்கடவுளது அருட்செயலையுன்னி மனமொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வந்தித்திருந்தனர்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளான முக்கட்பெருமான் முன்னொருகாலத்தில் தனதடியாராகிய மூவரையும் எரிக்காது விடுத்து முப்புறத்தைமட்டும் எரித்ததுபோல், தென்றல் தேருடைய மதனனைமட்டும் எரித்து, அவனுடன் சேர்ந்துவந்த குற்றமில்லாத இரதிதேவியை எரிக்காது விடுத்தனர். மன்மதனுடைய உடல் முழுவதும் வெந்து விபூதிபோலானபின் எம்பெருமான் பண்டுபோல் மோனநிலையில் வீற்றிருந்தனர். எல்லாம் செய்யவல்ல இறைவற்கு இஃதோ ரருமையான கருமமோ?

கணவன் ஒரு கணத்தில் மாய்ந்த தன்மையைக்கண்டு இரதிதேவி அளப்பருந்துன்பமாகிய ஆழ்கடலில் ஆழ்ந்தனள்; கண்ணீர் ஆறுபோல் ஓடிற்று; சரீரம் வியர்த்தது; நாசி நெட்டுயிர்த்தது; ஆவி ஒடுங்கிற்று; இவளும் நாயகனுடனே மடிந்தாளென்ன பார்த்தவர் பதைபதைத்துருக நிலத்தின்மேல் வீழ்ந்து மூர்ச்சித்தனள். நெடும்பொழுதுக்குப்பின் ஒருவாறு உணர்வுவந்தெழுந்து, இரு கரங்களையும் வயிற்றின்மீதறைந்து வாய்விட்டுக் கதறுவாளானாள். "திருமகளீன்ற செல்வப்புதல்வரே! உயிர்க்குயிரானவரே! நாராயணாது நற்றவக்குமாரரே! சம்பராசுரனுடைய உயிரைக்குடித்த தனிப்பெரும் வீரரே! கரும்புவில்லைப்பிடித்த காதலமுடையவரே! அழகிய பவளமலைபோன்ற பரசிவனாது நெற்றிக்கண்ணால் வெந்து அழிந்தீரே! தேவர்கள் கண்களெல்லாம் இனியாவது தூங்குமோ! அம்புயமேல் வைகும் அயனாரும் அகமகிழ்ந்தனரோ? திரிபுரத்தை நகையாலெரித்த சிவபெருமான்மேல் மலர்க்கணை செலுத்தச் செல்லுதல் முறையல்லவென்று அடியாள் எத்தனைமுறை சொல்லியுங் கேளாமற் போயினீரே! தேவகாரியஞ் செய்வதையே பெரிதாகத் துணிந்தீரே! உமது திருமேனி நீறாக வெந்தழிந்ததே! இதனைக்கண்டும் சகிப்பாருளரோ! என்னாருயிராகிய தாங்கள் மடிந்தபின் யான் தனித்திருப்பனோ? பரமன் விழி மாறுதலையடையவும், உமது ஆற்றல் அழிந்து போகவும், உடல் நீறாகவும், தேவர்கள் மனம் வருந்தவும், தணியாத பெருந்துன்பத்தீ என்மனத்தில் மூளவும் தாங்கள் எவ்விடம் ஒளித்திருக்கின்றீர்? உருவத்துடன் வாராதொழியினும் அருவாகவேனும் வந்துகூற மாட்டீரோ? என் ஆருயிர்த்துணைவரே! அடியாள் செய்த குற்றம் ஏதாவதுளதோ? எண்தோட்பரமனது திருக்கண்ணால் எரிந்து தாங்கள் இறந்த இப்பழியானது தேவர்களிடத்திற் சென்றதோ? இந்திரன்பாற் சென்றதோ? உம்மையிக்கருமத்தில் ஏவிய நான்முகன்பாற் சென்றதோ? அரனாது மோனநிலையை மாற்றுவனென்றுவந்த தங்களிடத்தில் சென்றதோ? யாரிடஞ் சென்றதோ? முப்புரமெரித்த முழுமுதற் கடவுளது யோகத்தைத் தவிர்க்குமாறு நின்னை வேண்டிய தேவர்கள் எல்லோருமா இறந்தனர்கள்? என் அருமைக்கணவா? தாங்கள் ஒருவரே யன்றோ உயிர்துறந்தீர். தேவர்கள் தங்களைக் கொல்லாமற் கொன்றனரே; என்னுயிரையுங் கொலை செய்தனரே; பொல்லாதவர்க்கு நன்றிசெய்தல் தம்முயிர்க்கல்லவோ முடிவுநேரும்? யான்முற் பிறவியில் என்ன தீவினைசெய்தேனோ? என்னைப்போன்ற இளமகளிர்க்கு யாது தீங்கு புரிந்தேனோ? விதியை யாரே யறியவல்லார். அன்பிற் குறைவிடமே! என்னை யாண்டருள்புரிவீர். நெருப்புக்கண்ணுடைய நிமலனை நோவதற்கு என்ன ஞாயமுளது?

**பொன்செய்தார் முடிகாணேன் அழகொழுகுந் திருமுகத்துப்**
**பொலிவு காணேன்**
**மின்செய்பூ ணணிதுலவும் புயங்காணேன் அகன் மார்பின்**
**மேன்மை காணேன்**

கொன்செய்பூங் கணைகாணேன் சிலைகாணேன் ஆடல்புரி
கோலங்காணேன்
என்செய்வேன் என்கணவா என்னை யொழித்
தெவ்விடத்தே இருக்கின்றயே.

உயிர்த்துணைவரே! ஆதி நாளையில் அக்கினிசாட்சியாக அரிய யருந்தியமார்கள் முன்னர் எனது கழுத்தில் மங்கல நாண்பூட்டி என்னை மணஞ்செய்துக் கொண்ட போது "எந்நாளும் உன்னைப் பிரியேன்" என்று சத்தியம் செய்தீரே. அச்சரத வாக்கியத்தை மறந்து என்னைத் தனியே விடுத்து நீங்குதல் தருமமோ? சிவமூர்த்தி யிடஞ் செல்வாயென்று தங்களை யனுப்பியதேவர்கள் இப்போது தங்களை எழுப்ப மாட்டார்களோ? தங்களுடைய தந்தையாகிய நாரா யணரை வல்லமை யுடையவ ரென்று கூறுகின்றனரே? அவருடைய மருமகளாகிய அடியாள் ஓலமென்று கதறியழுவதைக்கண்டு ஓடிவந்தா ரில்லை; நித்திரையிலிருக்கின்றார் போலும்? வெந்தழியவேண்டு மென்று தமது தலையில் விதித்திருந்தால் அவர்களையெல்லாம் வெறுப் பதில் என்னபயன்? அருமைக்காதலரே! மறையவனும் மலரவனை யும், மகபதியையும், தங்களையீன்ற மாயவனையும், முனிவர்களையும், மற்றுள்ள யாவரையும் தமது மலர்க்கணையால் மயக்கி வெற்றி பெற் றீர்; அதுபோல் ஆலமுண்ட அண்ணலையும் நினைத்து அனலிடைப் பட்ட விட்டிற்பூச்சிபோல் இவ்வாறு அழிவுற்றீர். குளிர்ந்த பனிநீர் விசிறிக்கொண்டு விளையாடி மலர்கொய்து நந்தனவனத்திடைசென்று பூவணைமிசை தென்றல்காற்றுவீச சந்தனச்சேறூடி நாம் இருவரும் கருத்தொருமித்து ஓருடலென ஒருமித்துவாழ்ந்த இன்ப வாழ்வெல் லாம் கனவு கண்டாப்போலாயிற்று. மருமகனென்று அவமதித்த தக்கனது மகத்தையழித்த வள்ளலாகிய மதிமுடிப்பரமனை வெல்லு தற்பொருட்டு தேவர்கள் தங்களை விடுத்தனரோ? அன்னவர்களால் வெந்தழிந்தனை. தங்களைப்போல் யானும் துன்பமென்னும் வெந்தழ லால் எரிகின்றேன். தாங்கள் சென்ற இடத்திற்கு யானும் வருகின் றேன்; என்னுயிர்க்குயிரே!" என்று பலவாறு புலம்பிவருந்தினள்.

(தொடரும்.)

---

உ

ஓம் குஹாயநம:

# கிருகஸ்தம்

(மனையறம்)

(27-வது பக்கத் தொடர்ச்சி.)

பிரமசரியத்தை மேற்கூறிய விதிப்படி அனுஷ்டித்து இருபத் தைந்து ஆண்டுக்குமேல் (ஆயுளின் இரண்டாவது பாகத்தில்) அக்கினி சாக்ஷியாக மணமுடித்துக் கொண்ட இல்லாளுடன் இல்லத்திலிருந்து செய்யப்படுவது கிருகஸ்தம் அவ்வாறு மணமுடித்துக்கொள்ளும் கன்னிகை தன்குலத்திற் பிறந்தவளாயும், தன் கோத்திரத்திற் பிற வாதவளாயும், நோய் முதலியன உள்ள பரம்பரையிற் பிறவாதவளா யும், மகள்தங்கை முதலிய முறையிற் சேராதவளாயும், தனக்கு இளை யவளாயும் இருத்தல்வேண்டும்.

நற்குலத்தில் தோன்றிய நல்லொழுக்கமுடைய நங்கையுடன் கருத்தொருமித்து தருமநெறியில் பொருளைச் சம்பாதித்து அப் பொருளை அறவழியில் செலவழித்து ஈசுர்பக்தியுடையவனாய் வாழுதல் வேண்டும். கிருகஸ்த தருமம் உயர்ந்ததென்று ஆன்றோர்கள் முடிவு கட்டியுள்ளார்கள். கிரகஸ்தன் தனக்கென்று சமையல் செய்யப் படாது. அதிதிகளுக்கென்றும் தேவஆராதனைக்கென்றும் சமைத்தல் வேண்டும், பசுவை இம்சித்தல் கூடாது. சந்தியாகாலங்களில் உணவருந்தபடாது. பகலிலும் முன்னிரவிலும் பின்னிரவிலும் ஒரு போதும் தூங்கப்படாது. ருதுகாலந் தவிர மற்றைக் காலங்களில் மனைவியை அழைக்கவும்கூடாது. கிருகஸ்தன் சமையல் செய்யாதவர் களான பிரம்சாரிகளுக்கும் சந்யாசிக்கும் அன்னமளிக்கவேண்டும், தன்னுடைய பத்தினியிடம் இன்பத்தை நுகர்ந்து மனத்தைத அடக்கி பாபத்தை விலக்கி, அறநெறியில் ஒழுகவேண்டும். உபாத்தியாயன், ஆசாரியன், அம்மான், அதிதி, தன்னை அடுத்தவன், வயோதிகன், இளை ஞன், நோயாளி, வைத்தியன், தாயாதி, சம்பந்தி, பந்து, மாதா, பிதா, ஒத்தகோத்திரத்தில் பிறந்தபெண், சகோதரன், புத்திரன், மனைவி, புத்திரி, வேலைக்காரர்கள் இவர்களுடன் கலகஞ்செய்யக்கூடாது. இந்தக் கலகங்களை விட்டால் எல்லாப்பாவங்களாலும் விடப்படுவான்.

இவர்களால் கலகமில்லாமல் ஜயிக்கப்பட்டவன் எல்லாவுலகங்களையும் ஜயிப்பான். மூத்த தமையன் பிதாவுக்கு சமானம். மனைவியும் மகனும் தன்சரீரமே. தொண்டர்கள் (வேலைக்காரர்கள்) தன்னுடைய நிழல், இல்வாழ்க்கையில் நாயகனும் நாயகியும் கருத்து வேறுபாடின்றி நடக்கவேண்டும். மனைவியினுடைய பணிவிடை முதலியவற்றினாலே கணவன் பரதாரத்தை நினையாமலும், கணவனுடைய அன்பு முதலியவற்றினாலே மனைவி பரபுருஷனை நினையாமலும், பரஸ்பரம் ஒருவரையொருவர் அன்புபாராட்டி மிகவும் ஒற்றுமையுடையவராக இருக்க வேண்டும். அப்படியுள்ள குடும்பம் மென்மேலுந் தழைத்தோங்கும். கணவன் தன்மனைவியை விரும்பாதொழிந்து பரதார கமன முடையவனாயிருந்தால், மனைவி கற்பொழுக்கத்தை விட்டு பரபுருஷனை இச்சித்தல் கூடும்; அதனால் அக்குலம் தாழ்ந்துவிடும். கணவன் வெளியூர் போகநேரிட்டால் தான்போய் வருமளவும் மனைவிக்கு உணவுக்கு வேண்டியவற்றை உதவி விட்டுப்போக வேண்டும்.

பிறன்மனைவியையும், வேசையையும், விதவையையும் விரும்பாதவனாகி, தன்மனைவியை விதிக்கப்பட்ட நாள்களில் கலந்து வாழ்பவன் கிருகஸ்தனேயாயினும் அறிஞர்களால் பிரமசாரியாகவே மதிக்கப்படுவான். அவன் இம்மையிலே நோயற்றவனாகவும், திடதேகமுடையவனாகவும், நீண்டஆயுளும் சற்புத்திரப் பேறுமுடையவனாகவும் பகைவர்கள் வணங்க புகழும் புண்ணியமும் பெற்று இனிதுவாழ்ந்து, மறுமையில் நற்கதியை அடைவான். தன்னையே கதியென்று நம்பி மணந்துகொண்ட பத்தினியை வெறுத்து அவளை உணவு உடை முதலியவைதந்து ஆதரியாமல் அவளுக்குத் துன்பஞ்செய்தவனும் தன் மனைவியை விடுத்து வேசையிடத்தாயினும் பிறன் மனைவியிடத்தாயினும் போனவனும், தன் மனைவிகொணர்ந்த சீதனப்பொருளை அழித்தவனும், கொலை புலை களவு கள் பொய்முதலிய தீமைகளைப் புரிந்தவனும் அளவில்லாத காலம் நரகிலே கிடந்துழலுவர். பிறவிதோறும் சூலை, க்ஷயம், தொழுநோய், குன்மம், முதலிய பிணிவாய்ப்பட்டு வருந்துவர்.

கிருகஸ்தன் எல்லாவுயிர்களிடத்தும் அன்புடையவனாக இருத்தல்வேண்டும். மோட்சத்தையும் தீர்க்காயுளையும் நோயின்மையையும் விரும்பினோர் புலால்புசிக்கலாகாது. புலால் புசித்தவன், அதற்கு உடன்பட்டவன், ஆயுதங்களைக் கொண்டு உயிர்களைக் கொன்றவன், செய்யென்று சொன்னவன், கொண்டுவந்தவன், கொலைசெய்வதைக் கண்டு மகிழ்ந்தவன், விலைவிலாகட்டுமென்று துரிதப்படுத்தினவன்,



சமைத்தவன் ஆகிய எண்மரும் நரகத்தை யடைவார்கள். ஜீவகாருண்யத்தால் புலாலைவிலக்கினவர் அசுவமேதயாகஞ்செய்த பலனையடைவார்.

பிறவுயிர்களுக்கு ஒருதுன்பஞ்செய்தால் அத்துன்பம் மீளவும் தனக்கே வரும்; ஆதலால் எந்த உயிர்களுக்கும் எவ்வகையான இன்னலும் புரியாது, உயிர்களுக்கு இனிமையே புரிந்து கொண்டு இருத்தல் வேண்டும். மெய்வாய் கண் நாசி செவி என்கிற ஐம்புலன்களையும் தீய வழியிற் செல்லாவண்ணம் அடக்கல்வேண்டும்.

பிறரிடை யின்னா வியற்றிடற்றமக்குப்
பிழைப்பற வெய்து மென்பதனை
அறிதரு மறிஞ ராதலாலுயிர்க
ளனைத்தையுந்தம்முயிர் போல
நெறியினிற் கருத லினியவா மைந்து புலனையு
நெறியலாவழியிற்
பொறியினிற் செலுத்தா தடக்கனன் குணர்ந்த
புலமையோரொழுக் கெனப்புகல்வார்

—காசிகாண்டம்.

சரீரம் வருந்தி யுழைக்கானாயின் பொருள்வாராது; பொருளில்லாமல் தருமஞ்செய்ய இயலாது; தருமமில்லாமல் இன்பமெய்தாது; ஆதலால் கிருகஸ்தர் ஒவ்வொருவரும் தத்தம் தொழில்களை ஊக்கமுடன் புரிதல்வேண்டும். இல்வாழ்க்கையிலிருப்போன் தாய், தந்தை, குரு, மனைவி, மகன், விருந்தாளி, வழிபாடுசெய்வோன், அதிதி, ஓமாக்கினி ஆகிய ஒன்பதுபேரையும் தினமுங் காப்பாற்றவேண்டும். இல்லையேல் மனிதரிற் பதரென்று கூறப்படுவான்.

குரவனைத் தாயைத் தந்தையை மனையைக்
குற்றமில் புதல்வனை விருந்தை
இரவுநன் பகலும் வழிபடு வோனை
யதிதியை யெரியினை யிந்து
கருது மோரொன் பதின்மர் தம்மையு நாளுங்
கருணைகூர்ந் தினிதளித் திடாது
மருவுமில் வாழ்க்கை பூண்டுளோன் றன்னை
மக்களுட் பதடியென் றுரைப்பார்.

—காசிகாண்டம்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

என்ற பொதுமறையின் பொன்மொழிப்படி கிருகஸ்தன் தனது வீடு தேடிவந்த விருந்தினருக்கு அடியிற்கண்ட ஒன்பது உபசாரங்களை உஞற்றுதல்வேண்டும்.

அவையாவன :—ஆசனத்திலிருந்து எழுந்திருத்தல், நன்குமதித்தல், இனிய மொழிகளைக்கூறுதல், குளிர்ச்சியாகப்பார்த்தல், வாருங்கள் வாருங்கள் என்று கூறுதல், அவர் பேசுமுன் களிப்புண்டாகப் பேசுதல், அருகில் இருத்தல், உபசாரம் மொழிதல், அவர்கள் செல்லுங்கால் பின்னே சென்று வழிவிடுதல்.

> விருந்தினனாக வொருவன்வந் தெதிரின்
> வியர்த்தல் நன்மொழியினி துரைத்தல்
> திருந்துற நோக்கல் வருகென வுரைத்த
> லெழுதல்முன் மகிழ்வன செப்பல்
> பொருந்துமற் றவன்ற னருகுற இருத்தல்
> போமெனிற் பின்செல்வ தாதல்
> பரிந்துநன் முகமன் வழங்கலிவ் வொன்பா
> னொழுக்கமும் வழிபடும் பண்பே. —காசிகாண்டம்.

தன் இல்லத்தில் வந்தவர்களுக்குக் காலலம்ப நீர், ஆசனம், தாகத்திற்கு நீர், தம்மாலியன்ற உணவு, தாம்பூலம், வசித்தற்கு இடம் படுக்கை, விளக்கு, எண்ணெய் ஆகிய ஒன்பது பொருள்களையும் கொடுத்தல்வேண்டும்.

பரதாரகமனஞ்செய்தல், நிலைதவறி நடத்தல், பொய்பேசுதல், கோபங் கொள்ளுதல், பகை கொள்ளுதல், கோள் சொல்லுதல், தகாத வார்த்தைகளைப்பேசுதல், மாயஞ்செய்தல், வஞ்சகம் பேசுதல், ஆகிய ஒன்பது குற்றங்களையும் நீக்குதல்வேண்டும்.

நீராடுதல், சந்தியாகாலங்களில் (காலை மாலை) கடவுளை வழிபடுதல், பஞ்சாக்ஷரம் முதலிய மந்திரங்களை ஜெபித்தல், அக்கினிகாரியம், வேதபாராயணம் (சைவர்கள் தேவார திருவாசக திருப்புகழ் முதலிய தமிழ்வேதங்களையும், வைணவர் நாலாயிர பிரபந்தம் முதலியவைகளையும் பாராயணஞ் செய்தல்), மலர்களால் இறைவனை அர்ச்சித்தல், வைசுவதேவம், (காக்கை முதலியவைகளுக்குப் பலியீதல்) பிதிர்தர்ப்பணம், அதிதி பூசை, ஆகிய ஒன்பது கருமங்களையும் இல்வாழ்வோர் ஒவ்வொருநாளும் செய்தல்வேண்டும்.

(தொடரும்.)

---

உ

ஓம் குஹாயநம:

# புனிதவதியின் நற்போதனை

K. V. சிவசுப்பிரமண்யன், B.A., சிதம்பரம்.

புனிதவதி என்னும் ஒரு நங்கை அழகில் இலக்குமியையும், அறிவில் ஔவையையும், கல்வியில் கலைமகளையும், ஈசுரபக்தியில் புனிதவதியாரையும், கற்பில் அருந்ததியையும், சைவசமயாபிமானத்தில் மங்கையர்க்கரசியாரையும் ஒத்தவள். மயிலின் சாயலும், குயிலின் மொழியும், அன்னநடையும் அவளுக்கு ஈடாகா. அவள் ஒருநாள் வைகறையில் துயிலெழுந்து அவசிய கருமம்முடித்து பல் முகம் கை கால் முதலியன சுத்தம் செய்து நெற்றியில் விபூதி தரித்து வீட்டின் முற்புறத்திலும் முற்றத்திலும் சுற்றுப்புறங்களிலும் சாணந் தெளித்து அலகிட்டு வீட்டிலுள்ள பாத்திரங்களை சுத்திசெய்து கவிழ்த்து வைத்துவிட்டு நதியில்சென்று நன்னீராடி இறைவனை வழிபட்டு வீட்டை யடைந்தனள்.

பின்பு காலைச் சிற்றுண்டிமுடித்து அகத்திலுள்ளார்க்கு அன்புடனளித்து அவரவர் தத்தங் கருமங்களுக்குச் சென்றதன்மேல் அயல் வீட்டிலுள்ள தன் தோழியாகிய கமலவல்லியை அவசரமாகக்காணும் பொருட்டு சென்றனள். அப்போது பொழுது புலர்ந்து மூன்றே முக்கால் நாழிகை அதாவது ஏழரைமணியாயிற்று. கமலவல்லியின் வீட்டுத் தெருக்கதவு திறக்கப்பட்டிருந்தது; அறைக்கதவு தாளிடப் பட்டிருந்தது; அதனால் அப்பெண்மணி இங்கு ஒருவரும் இன்னும் நித்திரையினின்றும் எழவில்லைபோலும் என எண்ணி கூடத்திலிருந்த ஒரு நாற்காலியில் வீற்றிருந்து அங்கு மாட்டியிருந்த அழகிய படங்களைப்பார்த்து மகிழ்ந்து மகிழ்ந்து கமலவல்லியின் வருகைக்காக காத்திருந்தாள். அப்படங்களின் நடுவில், மாதிருக்கும்பாதியனாய் விடையேறார்ந்தவனாய், நீலகண்டனாய், கங்கை வேணியனாய் உள்ள பரமேசுவரனது உருவிலும் திருவிலும் மிக்க படமொன்று கண்ணினைக் கவர்ந்து ஒளிர்தல்கண்டு உள்ளத்திற் கிளர்ந்தெழுந்த உவகையினால் திருத்தாண்டகங்கள் சிலவற்றை ஓதிக்கொண்டிருந்தனள். கமல

வல்லியின் செவியிலே அவ்வின்னிசை புகுதலும் அருண்டு புரண்டு எழுந்து கட்டிலைவிட்டிறங்கி இடையிலிருந்த துணியை சுருட்டிவாரிக் கொண்டு அவிழ்ந்த மயிரும் சோம்பிய முகமும் மூடிமூடிவிழிக்கும் பார்வையும் உள்ளவளாய் மெய் தளர்ந்து ஆடி அசைந்துகொண்டு மெல்ல மெல்ல வந்து கதவின்தாளை நீக்கி கூடத்தில்வந்து புனித வதியை நோக்கி சோம்பலோடு எதிரிலிருந்த ஒரு நாற்காலியிலமர்ந் தனள். இருந்து அசதி நீங்காமையின் உடம்பை நெளித்து முறித்துத் திமிர்வாங்கி கொட்டாவி விட்டுக்கொண்டு "நீ எப்பம்மா வந்தாய்? நேரமாயிற்றோ" என்றாள். புனிதவதி புன்முறுவல்பூத்து தன்பாடலை முடித்து "நல்லது! நீ போய் அவசிய கருமம்முடித்து முகங்கழுவி வா, பின்னர் பேசுவோம்" என்றாள். அவளது புன்முறுவலும் சொல்லும் நாணத்தையுண்டாக்கினமையின் விரைந்துசென்று கை காலலம்பித் துடைத்துக்கொண்டு அடுக்களைவாயிலிற்சென்று வேலை யாள் கொடுத்த காப்பிநீர் பருகி புனிதவதியின் அருகில் வந்துட்கார்ந் தாள். அதுகண்ட புனிதவதி சிறுநகைசெய்தனள். இருவரும் உடலும் உயிரும் போன்ற நண்பர்களாதலின் கோபம் எற்படவில்லை. பின் கமலவல்லி புனிதவதியைப் பார்த்து "தோழி! நான் நித்திரை விட்டு எழுந்துவந்தபொழுதும் இப்பொழுதும் என்னைப்பார்த்து நீ நகைத்த காரணமென்ன?" என்றாள். புனிதவதி சகியே! நீ வந்த கோலத்தையும் உன் பழக்கத்தையும் பார்க்க எனக்குச் சிரிப்புண் டாகியது" என்றாள். அதுபற்றி அவர்களிடையே சில சம்பாஷணை கள் நிகழ்ந்தன.

கமலவல்லி: என் கோலம் எப்படி இருந்தது? என் பழக்கத் தில் என்ன குறையிருக்கிறது? என் நன்மையின்பொருட்டுக் கூறு வாயாக.

புனிதவதி: $7\frac{1}{2}$ மணியாகியும் நித்திரைவிட்டெழாதிருந்து பின் என் குரல்கேட்டெழுந்ததும், அலங்கோலமாய் வெளியில் வந்ததும் பார்க்க முதலில் சிரிப்புண்டாயிற்று; இப்போது மற்றுமுள்ள உன் பழக்கவழக்கங்களைக்காணச் சிரிப்புண்டாக்கியது

கமலவல்லி: என் கணவர் ஊரிலில்லாமையால் கவலையற்று அயர்ந்து நித்திரையிலாழ்ந்துவிட்டேன்; அல்லாமலும் இந்த நேரத் தில்தான் எப்போதும் நான் எழுவது வழக்கம்; எழுந்ததும் உன் குரல் கேட்டபடியால் அவசரமாக அலங்கோலத்தோடு வந்துவிட் டேன்; இதையன்றி யான் இப்போது இழைத்த குற்றம் என்ன?



புனிதவதி: நல்லது நெற்றியில் விபூதியிட்டுவா; பின்னர் கூறு கிறேன்.

கமலவல்லி: ஆமாம் மறந்துவிட்டேன்; கிருஸ்தவர் விடுதிப் பள்ளிக்கூடத்தில் யான் இளமையிற் கல்விபயின்றேன்; அதனால் அங்கே பழகிய பழக்கம் இன்னும் என்னை விடவில்லை. (எனக் கூறிக் கொண்டே விபூதி எடுத்துத்தரித்தனள்.)

புனிதவதி: இப்போது உன் முகம் எங்ஙனம் பொலிவுற்றிருக் கிறது. கண்ணாடியிற் காண், "நீறில்லா நெற்றிபாழ்" என்றும் "பூதி யணியார் முகம் புறங்காடு" என்றும் கூறப்பட்டிருக்கின்றதே, நீ இவற்றை யோதி உணர்ந்ததில்லையா?

கமல: கிறிஸ்தவப் பாதிரிமார் பள்ளியில் இந்தப் பாடமும் எனக்குப் படிப்பித்தார்களா? நீ நல்வினை செய்தவள், சைவப்பள்ளி யில் படித்து ஒழுங்குமுறைகள் யாவும் அறிந்துகொண்டாய்.

புனித: தோழி! இவ்வளவு நேரம் தூங்கினதும் வைகறையில் செய்யவேண்டுமவற்றைச் செய்யாது விடுத்ததும் பிழையல்லவா?

கமல: என்ன பிழை? அதனால் நஷ்டமென்ன?

புனித: எங்கள் சீலத்திற்கு மாறு அல்லவா?

கமல: நன்று, நன்று! உனக்கும் இந்தப் பேய்த்தனம் இருக் கிறதா? நமது முன்னோர் இப்படி அநேக காரியங்களை அறிவீன மாய் எழுதிவைத்திருக்கிறார்கள் என்று எங்கள் பள்ளிக்கூடத்து ஆசிரியை சொல்ல அறிந்திருக்கிறேன். பாதிரியார் சொல்லவும் கேட்டிருக்கிறேன். இதனால் ஒரு பிரயோஜனமுமில்லை. அவரவர் சுகத்தை அவரவர் கவனிக்கவேண்டும்.

புனித: ஓகோ! உன் அறிவு இப்படி திருந்தியிருக்கிறதா? கிறிஸ்தவர் பள்ளியில் படிப்பதில் இத்துணை தீங்குளதென்பதை இன்றுதான் அறிகிறேன்.

கமல: நல்லது, சைவாசாரங்களில் என்ன பயன் இருக்கிறது என்பதைச் சொல் பார்ப்போம். அவை வெறும் எட்டுச்சுரைக்காய் தானே.

புனிதவதி: சொல்லுகிறேன், கவனமாய்க் கேள்: சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்குமுன் எழவேண்டும், சூரியன் கண்ணுக்குத் தெரிய ஒருமணி நேரத்திற்குமுன் சூரியகிரணமாகிய அதன் வெப்பம் பூமிக்கு வருகிறது. அதனால் பூமியில் ஒரு மாறுதல் உண்டாகிறது.

அப்போதுதான் நமது உடம்பிலுள்ள வாத பித்த சிலேட்டுமங்கள் மாறுபாடடையும். அந்த நேரத்தில் படுத்திருந்தால் வெப்பம் தலைக்கேறி பித்தமேற்படும். அதிலிருந்து பல நோய்கள் விளையும், ஆகலால் அப்போது சயனித்திருக்கலாகாது. 5 மணிக்குமுன்பே நமது உடற்கருவிகள் தொழில் செய்யத் தொடங்கிவிடவேண்டும். அது மட்டுமன்று, ஐந்துமணியளவில் நீராடவேண்டும். ஏனெனில் அப்போதுதான் தண்ணீரின் சொந்தகுணம் நீரிலிருக்கும் அதற்குமேல் சூரியவெப்பம் நீரின் குணத்தைமாற்றிவிடும். மாறியபின் நீராடுவதால் நன்மை இல்லை. வைகறையில் குளிக்காவிடில் சூரியன்முதலிய கிரகங்களினின்றும் பூமியிலிருந்தும் உடம்பினுட்செல்லும் பல சுத்த அணுக்கள் உட்புகும்போது உடம்பின் அழுக்குகளோடு சுவறி அசுத்தமடைந்து செல்ல நேரும் அது நோய்க்கு ஏதுவாமாகையால் அவ்வணுக்கள் தோன்றுமுன்னரே உடலை அழுக்குநீக்கி சுத்திசெய்ய வேண்டும்.

கமல : எழுந்தஉடனே கடவுளைவணங்குவது எதற்காக?

புனித. மனமும் புலனும் தம் செயலற்று ஒடுங்கியுள்ள நேரம் அதுவேயாம். அதனால் கடவுளை வணங்க அது நல்ல நேரம். இது ஆன்மசுகத்தின்பொருட்டு. மனம் ஆனந்தமாய்க் கடவுளை நினைத்தலால் இருதயம் குளிரும். இரத்த ஓட்டம் நன்கு பாவும்.

கமல : வைகறைத்துயிலெழுந்ததும் சாணந்தெளித்து மெழுகிறதினுல் என்ன பிரயோசனம் ?

புனித : தோழீ ! வீட்டின் முற்றத்திலும் பக்கங்களிலும் தினசரி உண்டாகும் அசுத்தங்களும் இரவில் அதன் தொடர்பாக வந்து குவிந்த கெட்ட அணுக்களும் நிறைந்திருப்பதால் அதைப் போக்க சாணந்தெளித்தலவசியம். வீட்டின் உட்புறத்தில் நாம் வாசம் செய்வதாலேற்படும் அழுக்கை நீக்க உள்ளும் மெழுகவேண்டும். இன்றேல் அவ்வசுத்த அணுக்கள் நமக்கு நோயை விளைக்கும்.

கமல : சாணம் அவ்வசுத்த அணுக்களை நீக்கிவிடவல்லதா ?

புனித : ஆம் நீக்கிவிடும். சில சமயம் பிள்ளைகள் இரவில் முற்றத்தில் மலசலங்கழித்தால் ஏற்படும் துர்நாற்றத்தை சாணந்தெளிப்பதால் போக்கிவிடுகிறோமல்லவா? மற்றும் வைத்தியர்கள் நேர்வாளம் எனும் நஞ்சு விதையை மருந்துப்பொருளாக்கவேண்டி கலாத்த சாணிப்பாலில் ஊறவைத்து அதன் நச்சுத்தன்மையை நீக்கு



தலை நீ கேள்வியுற்றிருப்பாய். சாணம் நச்சுத்தன்மையைப்போக்குவதில் இணையற்றது என்பதைக்கண்டு மேல்நாட்டார்கூட அதை இப்போது உபயோகிக்க ஆரம்பித்துவிட்டனர். சாணம் அசுத்தத்தை நீக்கும் சக்தி வாய்ந்ததாகையால் நம்முன்னோர்கள் அவ்வழக்கத்தை கைக்கொண்டனர். சாணம் அழுக்கை நீக்குவதால்தான் வண்ணான் கோடிப்புடவைக்கு சாணிப்பாலேற்றுகிறான். ஒரு வீட்டில் இறந்த பிரேதத்தை எடுத்த பின்னர் தரையிலும் பண்டபதார்த்தங்களிலும் சுவர்களிலும் படுக்கையிலும் கெட்ட அணுக்கள் வாயுவோடு சம்பந்தப்பட்டிருக்குமாகையால் சாணங் கரைத்தூற்றி சுத்தஞ்செய்யும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. போசனம் செய்யப்புகுமுன் இலை போடுமிடத்தில் அசுத்த அணுக்கள் இருக்குமாகையால் முன்னே வட்டமாக மெழுகுவதும் அந்நோக்கம்பற்றியே, போசனமுடித்தபின் எச்சிலினுலாய குற்றங்களைக் களையவேண்டி மெழுகுவர். இன்னும் சொல்வேன் கேள் : சிறுபிள்ளைகளுக்கு கையில் சொரி சிறங்கு வந்தால் கரைத்த சாணத்தில் கையை வைத்திருக்கச்செய்கிறோம்; அதனுல் கிருமிகள் கொல்லப்படுகின்றன.

கமல : ஆகா ! மிக நன்றாயிருக்கிறது ! இதுவரை எனக்கு இங்ஙனம் எடுத்துக்கூறுவார் ஒருவருமில்லை; இன்று கேட்க கேட்க ஆனந்தமா யிருக்கிறது. இனி தினந்தோறும் விடியற்காலையில் சாணந்தெளிக்கும் வழக்கத்தை மேற்கொள்ளுகிறேன்.

புனித : வீட்டையும் முற்றத்தையும் பாத்திரங்களையும் சுத்தி செய்துவிட்டு குளித்தல்வேண்டும். நீராடுஞ் சமயத்தில் உடம்பில் அழுக்கு நீங்கவும், வாசனை ஏறவும் சோப்பு பூசுதல் உசிதமல்ல. சோப்பு மிகச்சூடானது; சில அசுத்தப்பொருள்களும் அதில் சேருகின்றன. மற்றும் சோப்புக்கட்டி ஒன்றுக்கு கால் ரூபாய் அரை ரூபாய் விலைகொடுத்து வாங்கி அன்னியநாட்டிற்கு நாம் பிழைப்புண்டாக்குவதும் நம் பொருளை வீண்செலவு செய்வதும் புத்தியன்று.

கமல : அப்படியாயின் வேறு என்ன தேய்த்து நீராடலாம் ?

புனித : நம்முன்னோர் நமக்கென தேர்ந்தெடுத்த வாசனைப் பொடியை உபயோகித்தல் நலம். அதில் பயற்றம்மா, கஸ்தூரிமஞ்சள், கோரைக்கிழங்கு, கார்கோலரிசி, விலாமிச்சவேர், ஆவாரை இலை, முதலிய குளிர்ச்சியும், வாசனையும், அழுக்கெடுக்குந் தன்மையும், வாய்ந்த சாமான்கள் சேர்த்து அந்த வாசனைப்பொடியை தயா

ரிப்பார்கள். இது சவர்க்காரத்தைப்போல் கெடுதலும் அசுத்தமும் உள்ளதல்ல; செலவும் குறைவு; வாசனையும் குளிர்ச்சியும் தரும். வட இந்தியாவிலுள்ள பெண்கள் பலரும் இன்றும் இப்பொடியையே உபயோகித்து வருகிறார்கள். இன்றுகூட அப்பொடியைத்தான் தேய்த்துக்கொண்டேன். என்மேல் கமழும் வாசனையைப் பார். நீயும் இதை உபயோகிப்பாயாயின் அது நலமே; மற்றும் சவர்க்காரம் தோலின்மேலுள்ள இயற்கையான ஒருவகை நெய்ப்பசையை நீக்கி நாளடைவில் தோலைச் சுருங்கச்செய்துவிடுகிறது.

கமல: இதைப்பற்றி நான் இதுகாறும் அறியேன். இனி அப்படியே செய்வேன்.

புனித: இக்காலத்தில் அநேக மங்கையர் மஞ்சள் அணிதலை விட்டுவிட்டனர்; அது அறிவீனமே

கமல: நானும் மஞ்சள் அணிவதில்லை. சோப்பு தேய்த்த முகத்தில் மஞ்சள் பூசுவது கெடுதலென்று விட்டுவிட்டேன். மஞ்சளணிவதிலுள்ள நயமென்ன? அணியாவிடில் வரும் தீங்கு என்ன?

புனித: சுமங்கிலிகள் மஞ்சள் பூசுவது மெத்த அவசியம். அதனால் நாயகனது ஆயுள் பெருகும்; இன்றேல் ஆயுள் குறையும்.

கமல: நன்று நன்று! கணவனுக்கு ஆயுள்கூடுவதும் குறைவதும் மஞ்சளிலா இருக்கிறது! இது ஒரு குருட்டு நம்பிக்கை.

புனித: அப்படியல்ல; நம் தேகமும் ஆடவர்தேகமும் வித்தியாசமுள்ளவை. நமது சரீரம் சூடுள்ளதாயும் நாம் விடும் சுவாசம் நச்சுள்ளதாயும் அசுத்தமாயும் இருக்கிறது; ஆகலால் பெண்கள் நாயகரோடு சயனித்திருக்குங்கால் அவர்களது சுவாசம் நாயகன் மேற்பட்டால் நாயகன் நாசிவழியாய்ச்சென்று சுவாசப்பையில் தங்கி கேடு செய்யும். சுவாசத்தில் கேடுண்டாகவே ஆயுள் குறையும். இப்படிப் பலநாள் நடந்தால் முடிவில் மரணமும் ஏற்படும். மஞ்சளை பெண்கள் முகத்திலணிந்தால் சுவாசத்தின் நச்சுத்தன்மையை நீக்கும். அதுபற்றியே சுமங்கிலிகள் ஒரு நாளேனும் தவறாது மஞ்சள் பூசுவர். மஞ்சளின் சிறந்த குணத்தைக்கண்டுதான் பெரியோர்கள் அதை ஒரு மங்கலப்பொருளாக எடுத்துக்கொண்டார்கள்.

கமல: அப்படியா! அறிவிற் சிறந்த முன்னோர்கள் இதைக் கைக்கொண்டனர். இக்காலத்தில என்போன்ற சிறுமிகளுக்கு ஒன்றுந்தெரியாமையால் மூடத்தனமாய் மஞ்சட்பூச்சை விட்டுவிட



நேர்ந்தது. இப்போது அதன் அருமையை அறிந்தேன். மஞ்சட்பூச்சினால் முகத்தின் தோல் சுருங்கிவிடும் என்கின்றனரே? அதனால் முகத்தின் அழகு குறைந்துவிடுமென்று சில இளம் பெண்கள் பூசுவதில்லை, அதன் உண்மை என்ன?

புனித: அது தவறு. முகத்தின் அழகு யார்பொருட்டு? நாயகன் கண்டு மகிழும் பொருட்டன்றோ? நம்மால் நாயகனது ஆயுள் குறையுமானால் பின்பு இந்த அழகைப் பத்திரப்படுத்திவைத்திருப்பது யார் பொருட்டு? இது அறியாமையான செயல், மஞ்சளில் அத்தீக்குணமுமில்லை. அதனால் முகப்பொலிவும் நீங்குவதில்லை. அதோ உன் கணவர் சுந்தரனோடு வருகிறார், நான் போய் வருகிறேன்.

கமல: போய்வா, பின்னர் பேசலாம்.

---

உ

ஓம் குஹாய நம:

# என் பிரார்த்தனை

(K. V. லோகநாதன் அவர்கள், பெங்களூர்.)

அருணகிரிகளோதிய [1]பதினாறாயிரத்தை, கந்தனுக்கிசைந்த கற்பகத்தை, முன் தானவர்க்கும் வானவர்க்கும் நரை திரை மூப்பு பிணி நீக்க கடற்கடைந்து [2]கத்தனளித்ததைப்போல்—இக் கலியுகத்தில் [3]எக்காலத்தவரும் ஜனன மரணமெனும் பிரவித்துன்பத்தின்று வகல நம் கிருபானந்தவாரிதிகள் தம் [4]மூவலியினால் திருப்புகழை அமுதமாக்கிய பேருதவியினை [5]பூமியினும் பெரிதெனக்கொள்வேம். [6]திருப்புகழமிர்தமெனும் செஞ்சொல் லமுத களஞ்சியம் பாரினில் பல்லாண்டு பலுகி வாழி.

1 திருப்புகழ் பதினாறாயிரமென்பர்.

2 ஸ்ரீவிஷ்ணு.

3 எவ்வயதினரும்.

4 ஞானம், கா, காம் எனும் மூவலிகளாம்.

5 மக்களுக்கு சாவா மருந்தைப்போலருளிய பெருந்தகையாராகையால் புவிதாயினும் சிறந்துகூறப்பட்டது.

6 தேவாமுதம் குறையுந் தன்மையது; திருப்புகழமிர்தம் குறைவுபடாதது.

அசாமுதலவ்வெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றேயுலகு உலகதோற் றத்திற்கு காரணமாயும், ஆதியாயும், ஆக்குமமாயும் நின்ற பரப்பிரம்ம சச்சிதானந்த சொரூபமாயுள்ள கடவுள் ஒருவன் உளன் எனும் ஞான தத்துவங்களை உணர்த்துவது — ... "திருப்புகழமிர்தம் !"

ஆசையை யொழித்து ஆணவமின் பொய் பாசத்தையெலாமழித்து அற நெறியை கைபிடிச்செழுகச் செய்வது — "திருப்புகழமிர்தம் !"

இகபர சுகமளிக்கும் தரணிப்புகழ் இனியத் தமிழ் வேத பொக்கி ஷம் — ... ... "திருப்புகழமிர்தம் !".

ஈரெறும்பு ஈறாகவுள்ள எண்பத்துநான்கு கோடியோனி யுயிரீன்றவப்ப னும் எம்பிரான் சமராபுரி ஈசனின் ஒப்பற்ற பெருமை புகலும் — ... ... "திருப்புகழமிர்தம் !".

உத்தமிகளின் கற்பிலக்கண உயர்குண லக்ஷணங்களை கைங்கர்யப் படுத்தவல்ல கற்பகத்தரு — ... "திருப்புகழமிர்தம் !".

ஊனுடுக்கு ஓயாமல் கங்குல்பகலும் வீண் குதர்க்கம் பேசி அலைந்து திரிந் தவை குலைத்து குகனை வழிபடச்செய்வது — "திருப்புகழமிர்தம் !".

எனது நான் எனும் அனுபவமலாதிகளின் வேர்களைக்களைந்து தம்பி ரான் திருவடிக் தருவது — ... "திருப்புகழமிர்தம் !".

ஏகாக்கிரசித்தமே மகிபனைக்காணும் மூலமும் முரட்டற்ற மார்க்கமுமெனை முரசறைவிப்பது — ... "திருப்புகழமிர்தம் !".

ஐகள்வர் புரியும் வஞ்சகத்தை செக்கீர்குடிலை செஞ்சகத்தே யுணர்த்தி பாவங்களைப் பட்டுருவப்பண்ணி புண்ணியந் தருவது — ... ... "திருப்புகழமிர்தம் !"

ஒருவனே நல்லார்க்கும் பொல்லார்க்கும் அருளமுதந்தரும் அருமை தெய் வம், கலியுக மெய்தெய்வம் ! ஐமுகங்கொண்ட அறுமுகத் தெய்வத்தின் — ... ... "திருப்புகழமிர்தம் !".

ஓத ஓத மெஞ்ஞான ஊற்றெடுத்து உணர்வு கலந்து ஒளி கலந்திடும் உண்மை ஞான தீபிகை — ... "திருப்புகழமிர்தம் !".

ஔவியம், புலை, கள், களவு, காமமெனும் பஞ்சபாதகங்களை தவிர்த்து, அயிலும் அயிலொடு மயிலும், மயிலொடு அழகும் பொருந்திய ஆண் டவனின் புகழ் பாடுவிக்கும் — ... "திருப்புகழமிர்தம் !".

ஃ ரங்களை கற்றிடவும் கற்றதனை நிற்றிடவும் நின்றபின் கதிமருந்தத விடும் ... "திருப்புகழமிர்தம் !"

# "திருப்புகழமிர்தம்"

## முக்கிய விண்ணப்பம்.

## சந்தா விவரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி உள்பட | இந்தியா, சிலோன் .. | ரூ. 1 | 0 | 0 |
| | ரங்கோன், பர்மா ... ... | ,, 1 | 8 | 0 |
| | பினாங்கு, சிங்கபூர், தென்ஆப்ரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ... | , 2 | 0 | 0 |
| | தனிப் பிரதி உள்நாடு ... | ,, 0 | 2 | 0 |

1. சந்தாதாரராகச் சேருகிறவர்கள் சந்தாத்தொகையை, முன்னதாகவே மணியார்டர் அனுப்பவேண்டும். மணியார்டர் கூபனிலும் விலாசத்தைத்தெளிவாக எழுதியனுப்பவேண்டும்.

2. நமது பத்திரிகை, பிரதி சித்திரையிலிருந்தே தொடங்கும். ஆதலால், எந்த மாதத்தில் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவ்வருட சித்திரையிலிருந்தே பத்திரிகை அனுப்பப்படும்.

3. சஞ்சிகை கிடைக்கப்பெறாத சந்தா நேயர்கள், அத்தமிழ் மாதம் 10-உக்குள் எழுதிப்பெறவேண்டும் அதற்குமேல் எழுதுவோர் பணஞ் செலுத்திப் பெறவேண்டும். சஞ்சிகை கிடைக்கப் பெறாதவர்கள் தமது ஊர் தபாலதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும்.

4. விலாச மாறுவோர் தமது மாறுதல் விலாசத்தை உரிய காலத்திற்குள் நமது காரியாலயத்திற்கும், போஸ்டாபீசுக்கும் தெரி விக்கவேண்டும். இல்லையேல் அடுத்த சஞ்சிகை பழைய விலாசத் திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

மானேஜர், திருப்புகழமிர்தம் ஆபீஸ்,

2/7, ஐயா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

குறிப்பு:— பத்திராதிபர் அவர்களால் அச்சிடப்பட்ட திருப்புகழ் செட்டு விலை ரூ. 12. (தபாற்கூலி பிரத்தியேகம்.)




எல்லா நோய்களையும்

கண்டிக்கக்கூடியது

அமிர்தாஞ்சனம்